தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

கே.எஸ்.ராமு

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, பங்குனி 20 (2-4-'60). சனிக்கிழமை | இதழ் 42

அன்புள்ள தோழனே!

வணக்கம். தலைப்பைப் பார்த்துத் திகைக்கிறீர்களா? நியாயந்தான். கழகத்திலிருந்து நான் இராஜிநாமாச் செய்யப்போகிறேன்-இல்லை, இல்லை; எனக்கு 'கல்தா'க் கொடுக்கப்போகிறார்கள் - இப்படி மகிழ்ச்சியடைகிறார் ஒரு காங்கிரசு எம். எல். சி. அவரது நாளிதழ் இந்தச் செய்தியை அரையடி நீளம் வெளியிட்டு, அன்றைக்கு ஓரளவு விற்பனையாயிற்று.

எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. இப்படிக் கற்பனையெல்லாம் பண்ணிக் கொண்டிருக்காமல், என்னிடமே அந்த நாளிதழ் ஆசிரியர் கேட்டிருந்தால், நானே என்னைப் பற்றிய சுவையான செய்திகளைத் தந்திருப்பேன். ஆனால் அவ்வளவு கண்ணியம் காங்கிரசுக்காரருக்கு ஏது !?

'அவருக்கும் இவருக்கும் லடாய்; அவர் கை ஓங்குகிறது; இவர் கை வீங்குகிறது. அவர் அந்தக் கட்சியில் சேருவார்; இவர் இந்தக் கட்சியில் சேருவார்' என்றெல்லாம் கயிறு திரித்துக்கொண்டிருப்பதில், காங்கிரசுக்காரர்கள் இப்போது அதிக கவனம் செலுத்துகிறார்கள். கட்டுப்பாடாக வளர்ந்துவிட்ட ஒரு குடும்பத்தைப் பிரித்தால் மட்டுமே தங்கள் 'கம்பெனி'யை நடத்தமுடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். சரித்திரம் போதிக்கின்ற உண்மைகளைக் கொஞ்சம்கூட அறியாத இந்தப் பரிதாபத்திற்குரியவர்கள் தோல்வியடைந்தவர்களின் பட்டியலில் தாங்களும் ஏறப்போகிறார்கள்.

கழகத்துக்குள்ளே ஏதோ குழப்பம் நடந்துகொண்டிருப்பது போலவும், இப்போது கழகம் பலவீனப்பட்டிருப்பதுபோலவும் பிரச்சாரம் செய்துவிட்டால், கழகஉறுப்பினர்கள் தளர்ந்துவிடுவார்கள் என அவர்கள் கருதுகிறார்கள். ஏதோ டெல்லியிலே தலைமைப்பீடத்தை வைத்துவிட்டு, கன்னியாகுமரியிலே இருக்கிற தொண்டன் பத்திரிகையில் படித்துத் தெரிந்துகொள்வதுபோல், நம் கட்சியும் தொண்டர்களும் தூரத்தில் இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். பக்கத்திலிருந்து பழகிக் கொள்கிற நமக்கு உள்ளே நடக்கும் ஒவ்வொன்றும் அனுபவப் பூர்வமாகவே தெரியும். யாரும் சொல்லி நாம் கேட்கப் போவதில்லை. கட்சிக்கென்று சில யோசனைகளை சம்பத் அவர்கள் வைத்தார்கள். அந்த யோசனைகளைக் கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களுக்குத் தந்தார்கள். இருதய சுத்தியுள்ள ஒரு அரசியல் தலைவன் என்ன செய்யக் கூடுமோ, அதைத்தான் அவர்கள் செய்தார்கள். கண்ணியமும், பெருந்தன்மையும்மிக்க ஒரு அரசியல் தலைவன் அதை எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டுமோ அப்படியே அதனை அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். கழக வளர்ச்சியில் ஆர்வ மிக்க தோழர்கள் அதை எப்படி ஆராய வேண்டுமோ அப்படியே

இராஜி நாமா

சென்னை,
2-4-'60.

ஆராய்கிறார்கள். கட்டுப்பாடான முடிவு அதற்கு எப்படிக் கிடைக்க வேண்டுமோ அப்படிக் கிடைக்கும்.

பிற இயக்கங்களைவிட திராவிட முன்னேற்றக் கழகம் இன்று பெருமளவில் வளர்ந்திருக்கிறது. வளர்ச்சியின் அளவு அதிகரித்தால் ஓரளவுக்கு மாறுபட்ட கருத்துக்கள் தோன்றுவது தான் எந்தக் கட்சிக்கும் இயற்கை. சில்லரைக் கட்சிகளே ஒன்றுக்குள் ஒன்பது பிளவுகளை உண்டாக்கும் போது, தி. மு கழகம் போன்ற மாபெரும் இயக்கங்கள் ஒன்றிரண்டு மாறுபட்ட கருத்துக்களைச் சந்திக்க வேண்டியிருப்பதில் வியப்பில்லை. இதில் எந்த விதமான குற்றச்சாட்டுக்கும் இடமில்லை. யாருக்கும் யாரிடத்தும் பகையில்லை. தத்துவங்களில் முரண்பாடு இல்லை. யாரிடத்தும் யாரும் களங்கம் கண்டுபிடிக்கவுமில்லை.

நடை முறையில் சில மாற்றங்கள் விரும்பப்படுகின்றன. அந்த மாற்றங்கள் தேவை என்பதை இயக்கத்தின் எந்த அங்கமும் மறுக்கவில்லை. சரியாகவோ தவருகவோ கட்சியின் கீழ் மட்டங்களில் விரும்பத் தகாதவர்கள் சிலர் வேடமிட்டு நுழைந்திருப்பது போல் தோன்றுகிறது. ஜனநாயகப் பூர்வமான உள்ரகசியங்களை அந்த விரும்பத்தகாதவர்கள் வெளியிடுவது போல் காணப்படுகிறது. இந்தக் குழப்பங்களை உண்டாக்கும் 'புண்ணியத்தில் அவர்களுக்கும் பங்கிருக்கிறது. தன் பலம் கொண்டும் தத்துவம் கொண்டும் நம் இயக்கத்தை வெல்லமுடியாத சில்லரைகள், பண பலங்கொண்டு சிலரைக் கவர முயல்வதாக நாம் கருதமுடியும். ஆனால், முன் இயக்கத்துக்காகச் செத்தவனெல்லாம் எந்தத் தியாகத்தைச் செய்தானே அந்தத் தியாகம் பழுதுபடும்படி நாம் விட்டுவிடமாட்டோம். காங்கிரசுக்காரர்கள் கிளப்பிவிடும் புரளி இந்த உறுதியை நமக்கு வழங்கியிருக்கிறது.

ஒன்றை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். கட்சியின் எல்லா அங்கங்களும் சரிவர இயங்குகின்றனவா? இவ்வளவு பெரிய இயக்கம் நியாயமாகச் செயல்பட வேண்டிய முறையில் செயல்படுகிறதா? கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம்வரை களைகளும், காளான்களும் புகுந்துவிடாதபடி கழகம் காப்பாற்றப் பட்டிருக்கிறதா? இந்தக் கேள்விகளுக்கு நாம் பதில் கூற வேண்டியது நியாயம்தான். தந்தையைப்பகைத்துக் கொண்டு 'சாப்பாட்டிற்கு அலைந்து இயக்கத்தை வளர்க்கின்ற பிள்ளை, மனைவியைப் பகைத்துக்கொண்டு மரத்தடியிலே உறங்கி இயக்கத்தை வளர்க்கின்ற கணவன், இயக்கத்திலிருப்பதால் அண்ணன் தம்பிகளால் துரத்தப்பட்டு அலைந்து தவித்து 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று முழங்கிக்கொண்டிருக்கிற சகோதரன்-இவர்கள் இந்த நியாயமான கேள்விகளுக்குப் பதிலை எதிர்பார்ப்பார்கள். அவர்கள் பாடுபடுகிறார்கள், எதிரிகளின் கேவலமான தாக்குதல்களுக்கு ஆட்படுகிறார்கள். அடியையும் வாங்கிக்கொண்டு வழக்கிலேயும் குற்றம் சாட்டப்படுகிறார்கள். நீதி மன்றத்தில் ஒரு வழக்கறிஞரை வைப்பதற்கும் வழியில்லாமல் திண்டாடுகிறார்கள். வழக்கு நடத்தச் சக்தியில்லாததால் அநியாயமான தண்டனைகளுக்கு ஆளாகிறார்கள், இவ்வளவு பட்டும் இயக்கப்பற்றுக் குறைகிறதா என்றால், அணுவளவும் இல்லை. இத்தகைய உத்தமத் தொண்டர்களை வேறு எந்த இயக்கமும் சந்திக்க முடியாது. ஆனால் இவர்கள் படுகின்ற துயரங்களால் கிடைக்கும் பலனை ஏதோ ஒரு மூலையில் ஒரிருவர் இருந்து பாழ்படுத்திக் கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது. பொதுக்குழு நிகழ்ச்சிகள், தனிக்கூட்டச் செய்திகள் பகிரங்கமாகப் பேசப்படுகின்றன. எதிரிகள் ஒன்றைப் பத்தாக்கிச்சொல்கிறார்கள். இந்த நிலையைச் செதுக்கி செம்மைப் படுத்த வேண்டாமா? வேண்டும்! கட்சிக்குள் இராணுவ முறைபோன்ற கட்டுப்பாடு வேண்டும். இயக்கத்திற்குத் துரோகமிழைப்பவர்கள்-அவர்கள் யாராயினும் தூக்கி எறியப்பட வேண்டும். இதைச் சொல்லுகிற நானே சந்தேகிக்கப்பட்டாலும், இந்தத்

— 12-ம் பக்கம் —

ஏது ஆபாச இலக்கியம்?

இரா மதனகோபால். பி. காம்., டி. ஐ. பி.

ஆபாச இலக்கியம் அல்லது இலக்கியத்தில் ஆபாசம் என்பது என்ன?

இந்தக் கேள்விக்கு எளிதில் பதில் சொல்லிவிட முடியாது. ஒவ்வொரு நூற்றாண்டிலும், ஒவ்வொரு இலக்கிய சகாப்தத்திலும் கேட்டுப் பதிலளிக்கமுடியாத ஒரு கேள்வியாகவே இருக்கிறது இது. இலக்கியச் சிற்பிகளாகட்டும், பொதுமக்களாகட்டும் இதுபற்றி ஒரு முடிவிற்கு இதுவரை வந்ததாகக் காணோம். ஆங்கிலத்திலே சொல்வார்கள் "நேற்றையக் கேளிக்கை இன்றைய வாடிக்கையாக மாறிவிடும்!" என்று. அதுபோல் நேற்று நமக்கு ஆபாச இலக்கியமாகத் தென்பட்டதெல்லாம் இன்று நல்ல இலக்கியங்களாகத் தென்படுகின்றன.

"ஆபாச இலக்கியம்" பற்றித் திறனாய்வாளர்கள்கூடப் பலதரப்பட்ட கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இங்கு ஆபாசம் என்று கூறுகையில் பெர்னார்ட்சா ஒருமுறை ஆபாசத்தைப் பற்றிக் கூறியது நினைவிற்கு வருகிறது.

ஒருமுறை பேரறிஞர் பெர்னார்ட்சா அவர்கள் ஒரு புகைப்படக் கண்காட்சிக்கு சென்றிருந்தார்கள். அங்கு பல திறப்பட்ட புகைப்படங்கள் கண்காட்சிக்காக கலைத்திறம் பளிச்சிட எடுத்து வைத்திருந்தனர்.

ஒவ்வொரு புகைப்படமாகப் பார்த்துவந்த பெர்னார்ட்சா அவர்கள் ஒரு குறிப்பிட்ட புகைப்படத்திற்கு அருகில் வந்ததும் நின்று, உற்றுக் கவனித்தார். அந்தப் புகைப்படம்

ஒரு பெண்ணுடையது. அழகான ஒரு பெண் நிர்வாணமாக நின்று இயற்கையின் எழில் கலைபொலிய நின்று காட்சிதரும் கலையழகு நிரம்பிய கவின்மிகு புகைப்படம் அது. அந்தப் படத்தையே சிறிதுநேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார் பெர்னார்ட்சா. அப்போது அங்கு வந்து பெர்னார்ட்சா பார்ப்பதையேபார்த்துக் கொண்டிருந்த பாவையொருத்தி—அவருக்கு தெரிந்தவள்தான்—கேலியுடன் "ஆகா, பெர்னார்ட்சா அவர்கள் அசிங்கமான, ஆபாசம் நிறைந்த படத்தையே பார்த்துகொண்டிருக்கிறார்" என்று குறும்பும் கலந்து சொன்னாள்.

அதைக் கேட்ட பெர்னார்ட்சா புன்முறுவலித்தார். பின் "அம்மையே! நான் அசிங்கமான, ஆபாசமான படத்தையா பார்த்துக்கொண்டிருக்கிறேன். எது அசிங்கம்? எது ஆபாசம்? அசிங்கமும், ஆபாசமும் அந்தப் படத்தில் இல்லை. உம்முடைய மனத்தில் இருக்கிறது, அசிங்கம். உம்முடைய உள்ளத்தில் இருக்கிறது ஆபாசம். அவற்றை நீக்கிவிட்டு அந்தப் படத்தைப் பாருங்கள். எப்படி தெரிகிறது என்று. இயற்கையழகும், கலையின் பொலிவும், பெண்மையின் பூரிப்பும் பொங்கி மனதைக் கவருவதை உணருங்கள்." என்று கூறினார். இது கேட்ட அப்பெண்மணி வெட்கமடைந்தாள்.

இங்கு நாம் பெர்னார்ட்சா அவர்கள் 'அசிங்க'த்தைப் பற்றியும், 'ஆபாசத்'தைப் பற்றியும் அறிவுறுத்தியதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

எது ஒன்றையும் நாம் ஆபாசம் என்று நினைத்துப் பார்த்தோமேயானால் அதெல்லாம் ஆபாசமாகத் தோன்றும். அதற்காக நாம் பிரான்சிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வரும் அரைநிர்வாண, முழு நிர்வாண அழகிகளின் படங்கள் நிறைந்த பத்திரிகைகளை ஆபாசமாக இல்லை என்று கூறிவிட முடியாது. மனிதனின் கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டி, உள்ளம் மாசுபடியும் வண்ணம், உடல் உருக்குலையும் வண்ணம் படங்களை பலவண்ணங்களிலும், விதவிதமான நிலைகளிலும் வெளியிட்டு குட்டிச்சுவராக்கும், "காம" லீலைகளைக் காட்டும் இதழ்களை ஆபாசத்தின் உச்சநிலை என்று அச்சமின்றிக் கூறலாம்.

சின்னாட்களுக்கு முன்னர் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகளில் விலாடிமிர் நோபோகோவ் என்பவர் எழுதிய "லோலிடா" எனும் நூல் ஒரு பெரும் பரபரப்பை உண்டாக்கியது. கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டும் வண்ணம் மோசமாக எழுதப்பட்டிருக்கிறது என்று 'விமரிசக' மேதைகள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

அதே போன்றுதான் டி. எச். லாரன்சு எழுதிய "லேடி சேட்டர்லியின் காதலன்" எனும் நூலின் முழு, திருத்தாத, உள்ளது உள்ளபடியே பதிப்பிக்கப்பட்ட புத்தகம் பெருங் கிளர்ச்சியை உண்டுபண்ணியது, மேலைநாடுகளில் சேம்சு சாய்சு எழுதிய "உல்லிசிசு" எனும் நூலும் இத்தகைய பரபரப்பையும், கிளர்ச்சியையும் உண்டுபண்ணியது.

கடந்த மாதம்கூட எர்ன்கின் கேல்டுவெல் எழுதிய "கடவுளின் சிறு ஏகர்" எனும் நூலை "ஆபாசம்" என்றும் "சில குறிப்பிட்ட அளவு பிரதிகளே அனுமதிக்கப்பட வேண்டும்" என்றும் மெல்போர்ன் நீதிபதி ஒருவர் அந்நாட்டு போலிசுக் குற்றத்தின்கீழ் தடைசெய்து தீர்ப்பளித்திருக்கிறார். அது மட்டுமல்லாமல் அந்நூலின் நான்கு பிரதிகள் - மெல்போர்னில் உள்ள வில்லியம் இனெமேன் வெளியீட்டாரின் அலுவலகத்தினின்று எடுக்கப்பட்டவை - கொளுத்தப்பட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்.

ஆனால், இந்த நீதிபதியின் தீர்ப்பை நிறுத்திவைத்து, அந்நூலின் பிரதிகளை கொளுத்தக்கூடாது என்றும், தடையை நீக்கியும் ஆத்திரேலிய சுப்ரீம் கோர்ட்டின் நீதிபதி ஆடம் என்பார் இப்பொழுது தீர்ப்பளித்திருக்கிறார்.

இதனால் ஒருவர் கண்ணுக்கு 'ஆபாச'மாகத் தென்படுவது மற்றொருவர் கண்ணுக்கு 'நல்ல'தாகத் தென்படுவது, தெரிகிறது அல்லவா!

இங்கிலாந்தில் இந்த ஆபாச இலக்கியத்துக்கு "சென்கின்சு சட்டம்" என்றே ஒன்று இருக்கிறது. அச்சட்டப்படிதான் ஆபாச இலக்கியத்தைப்பற்றிய தீர்ப்பு கூறப்படுகிறது.

'நேர்மையான கலை'த் தன்மை பற்றித்தான் இந்த ஆபாச இலக்கியம் என்ன என்ற கேள்வி சுழல்கிறது வாழ்வில் இனச் சேர்க்கையும் அது தரும் பிரச்னைகளும் தாம் கலைகளிலும், இலக்கியங்களிலும் முக்கியமான கருப் பொருளாக விளங்குகின்றன. இதனால்தான் இலக்கியத்தில் ஆபாசம் வர ஏதுவிருக்கின்றது என்று கூறுகின்றனர்.

பொதுவாகவே நம்மவர்கள் ஆண் பெண் உடலுறவுபற்றியோ, பெண்ணின் உடலமைப்புபற்றிய வர்ணனையையோ, இன்னும், இதுபோன்ற சப்பவங்கள் கொண்ட நூல்களை ஆபாசம் நிறைந்தது என்று கூறிவிடுகின்றனர். சிலர் படுக்கையறை சம்பவங்களை விவரிக்கும் நூல்களை ஆபாசம் என்கின்றனர். ஆசுகார் ஒயில்டின் வாழ்வில் நடந்ததைப் போல்-அழகான சிறுவர்கள் மீது மோகம் கொண்டு தகாதன செய்வதை எழுதுவதை ஆபாசம் என்று சொல்கின்றனர். காமப்பித்துபிடித்துப் அலைந்து, கன்னிப் பெண்களின் கற்பைச்சூறையாடி, பருவத்திற்கு ஒன்று, இனத்திற்கு ஒன்று என்று எழில் மங்கையரைச் சுவைத்து பின் வாழ்வைச் சீரழித்துக்கொள்பவர்களைப் பற்றி எழுதியிருக்கும் நூலை ஆபாசம் என்பர். இதேபோன்று காமப் பித்துப் பிடித்து கண்டவனுடன் கொட்டமடித்து கொண்டவனுக்குக் கொடும் துரோகமிழைத்துக கற்பைக் கடைச்சரக்காக்கும் காதகியரின் திருவிளையாடல்களை எழுத்திலே வடித்திருக்கும் இலக்கியத்தை 'ஆபாசம்' என்று புலுவர். வாழ வழியின்றி, வயிற்றுக் குணவின்றி, சாகவும் அனுமதியின்றி அதனால் சதையைச் செல்லாக்காசுக்கு-உடலை வெள்ளிப் பணத்துக்கு-விற்கும் சமுதாயத்தின் அவமானச் சின்னங்கள் எனப்படும் பரிதாபத்திற்குரிய சகோதரிகளின் சீரழித்த சரித்திரத்தை நூலாகக் கண்டால் ஆபாசம் என்று அலறுவோரும் உண்டு. இப்படி பலப்பலர் பலவித நூல்களை ஆபாசம் என்று கூறிடக் காண்கிறோம்.

உண்மையில் ஆபாசம் என்றால் தான் என்ன? மனிதனுக்கும், சமுதாயத்திற்கும், உலகிற்கும் சில பல கட்டுபாடுகள் உள்ளன. உடையின்றி மனிதன் ஓடினால், ஆபாசமாக இருக்கிறது என்கிறோம். மூடவேண்டியதை மூடாமல், அரைநிர்வாணமாகப் போகும் நங்கையரைக் கண்டால் ஆபாச உடையணிந்து அச்சமின்றிச் செல்கிறாள் என்று வெறுப்புடன் சொல்கிறோம். கீழ்த்தரமான முறையில் ஒருவன் பேசினால் "என்ன ஆபாசமாக இவன் பேசுகிறான்!" என்று இகழ்கிறோம். இதேபோன்றுதான், இலக்கியத்திலும் எந்த ஒரு பகுதியோ, முழுவதுமோ, பாதியோ இல்லை மீதியோ, நம்முடைய உணர்ச்சிகளைக் கீழ்த்தரமான முறையில் தூண்டி மோசமாக நடக்கச் செய்தால் அதை ஆபாச இலக்கியம் என்கிறோம். இதனால் ஆபாசம் என்பது கீழ்த்தரமான செயலைச் செய்யக்கூடிய, கீழ்த்தரமான உணர்ச்சியைத் தூண்டக்கூடிய ஒரு செய்கை - பொருள் என்று சொல்லலாம். எனவே இலக்கியத்திலும் இப்படிப்பட்ட உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியவற்றை ஆபாச இலக்கியம் என்று சொல்லலாம்.

தற்பொழுது நோபோகோவ் எழுதியிருக்கும் "லோலிடா" எனும் நாவலைப்பற்றி பிரமாதமாகப் பேசப்படுகிறது, அந்த நாவலை ஆபாசம் என்று முத்திரையிட்டுவிட்டனர்.

"லோலிடா" எனும் அந்த நாவல் வேற்றுமொழிக்காரனால் எழுதப்பட்டது என்றாலும், அதில் காணப்படும் ஆங்கில நடை அருமையாக இருக்கிறது. ஆங்கிலேயரே வியக்கும் வண்ணம் அழகான நடையில் எழுதப்பட்டிருக்கிறது; அந்நாவல்.

காதலைப் பற்றியும் காதலுக்கு மாறுபட்ட ஒன்றையும் அருமையாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் அதன் ஆசிரியரான விலாடிமிர் நோபோகோவ். வாழ்வியலைப் பற்றியும் வகையாகச் சொல்லியிருக்கிறார் அவர், அதில்.

இந்த நாவலைத் தடைபோடச் சொல்கின்றனர், சிலர். ஆனால் என்னவாகுமென்று இன்னும் தெரியவில்லை.

கெட்டுப்போகிறவன் எங்கிருந்தாலும், எப்படியிருந்தாலும் கெட்டுப் போய் விடுவான். அவனைக் கட்டுப்படுத்த யாராலும் இயலாது. வாழ்வில் தீயதை, தகாததை எடுத்துக் காட்டி எச்சரிக்கும் இலக்கியங்களால் எவ்வளவோ நன்மைகள் உண்டு.

தீய வழிகளில் செல்லவிடாமல் தடுக்க அவை உதவுகின்றன.

இலக்கியத்தில் ஆபாசம் என்று தடைபோட வந்தால், கட்டுப்படுத்தினால் இலக்கியம் வளராது. இதனால் இலக்கியச்செடி பட்டுப்போகவும் வழியுண்டு. சராசரி ஒவ்வொரு மனிதனும் உணரக்கூடிய உணர்ச்சிகளைத்தான் கலை மெருகு கொடுத்து எழுதுவதே இயக்கம். இதனால் சில சமயங்களில் கொஞ்சம 'ஆபாசமாக'வே எழுதவேண்டி வரும். அதற்காகவே அதை ஆபாச இலக்கியம் என்று சொல்லி விடுதல் அறிவுடைமையாகாது,

'ஆபாசம்' அது இது என்று இலக்கியத்துக்குத் தடையோ, கட்டுப்பாடோ விதிக்க வேண்டி நேர்ந்தால், அது இலக்கியத்திற்குச் சாவுமணியடிப்பதைப்போலத்தான். முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்த நூல்களுக்கு தடை நீக்கப்பட்டதால்தான் இன்று இலக்கிய உலகு இவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது.

முடிவாகக் கூறவேண்டுமானால் 'ஆபாச' இலக்கியம் என்று ஒன்றுமே இல்லை என்றுதான் கூறவேண்டும். ★

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 2-4-'60 இதழ் 42

காமராசரே! இந்தப் பாடத்தையும் படியுங்கள்!

வடவர்களின் வெறியாட்டம் நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது!

கனி கொடுக்கும் மாமரம் வளர்வதற்கு நெடுநாட்கள் ஆகும். ஆனல் உயிர் குடிக்கும் கள்ளிவேயோ விரைவில் வளர்ந்துவிடும்.

நீடித்து நின்று நல்ல பலன் கொடுக்கும் பொருள்கள் வளர்ச்சியடைவதற்குள், பாழ்நிலையைக் கூட்டிவரும் தீமைகள் விரைந்து வளர்ந்து, வளர்ந்த விரைவிலேயே அழிந்துவிடுகின்றன. இந்தி வெறியும் இப்போது வளரத் தொடங்கியிருக்கிறது! வெறிபிடித்து வளரத் தொடங்கியிருக்கிறது! இந்த இந்தியைத் திணிப்பதற்கும், இந்தி வெறியை வளர்ப்பதற்கும் நேருமுதல் அடியாள் அளகேசன்வரை மேற்கொண்டுள்ள பணிகள் சொல்லுந்தரமில்லை. வெறியின் உச்சநிலையில் அவை ஆடும் ஆட்டமும், கொட்டும் கொடுமையும் சொல்லுந்தரத்தனவல்ல அவர்கள் இப்போது விரித்திருக்கும் புதுமுறை மக்களாட்சியில் நம்பிக்கை கொண்டோரெல்லாம் எதிர்க்கக்கூடியதாகும்.

சுதந்தரக்கட்சியினர் பாட்னவிலே அண்மையில் மாநாடு கூடியிருக்கின்றனர். எண்ணற்ற பிரதிநிதிகள் வந்திருந்து கூட்டத்தின் நிகழ்ச்சிகளைக் கவனித்திருக்கின்றனர். 300000 உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்ட அது, பிறந்த ஓராண்டுக்குள் அது அடைந்திருக்கும் முன்னேற்றத்தின் போக்கையும் நாம் அறிவோம். ஆனல் நாம் இங்கே கணக்கிடப்போவதெல்லாம் காங்கிரசாரின் கணக்கையும் நோக்கையும் குறித்துத்தான்.

திரளான மக்கள் பாட்ன மாநாட்டில் கூடியதைப் பார்த்ததும் காங்கிரசார் சொல்லத் தொடங்கியிருக்கும் கதை என்ன தெரியுமா? "ஆச்சாரியாருக்காகவா, அந்தக் கூட்டம் வந்தது என்றெண்ணுகிறீர்கள்? அரங்காவும் மசானியும் முன்சியும் பிறரும் தரும் விளக்கங்களைக் கேட்கவா அந்தக் கூட்டம் வந்ததென்று எண்ணுகிறீர்கள்? இல்லை! இல்லை! பினுராயின் கணவன் பிரேம்நாத்தும், பின்னணிப் பாடகர் ஆத்மாவும் கூடித்தான் அந்தக் கூட்டத்தை வரவழைத்தார்கள். கொள்கை உரம் அற்றவர்கள், கேவலம், கூத்தாடிகளைக் காட்டிக் கூட்டம் சேர்த்தார்கள். இதுவா பெரிது? இதுவா கொள்கை? நேருவை எதிர்ப்பதற்காக பிரேம்நாத்திடமா, கை குலுக்குவது?" என்று பேசினராம் காங்கிரசார் பலர். ஆகா! அவர்கள் நெஞ்சம் அப்படியாகிலும் திருப்தியடைகிறதே! அது அடியோடு ஒழிக! ஒழிக! ஆனல் அவரைப் பற்றிச் சளசளவென்றளக்கும் இவர் திறமை என்னவாம்? ஆவடிக் காங்கிரசில் எருமைக்குரல்களையும் ஏமாந்ததுகளையும் கூட்டிக்கொண்டு வந்து மேடையில் நிறுத்திக்காட்டினர். "இந்த எருமைக்குரல் அழகர்களைக் காண இது சமயம் போனல் மறு சமயம் வாய்ப்பதரிது!" என்றுகூடக் கத்திக் கூட்டத்தை வரவழைத்தனர். வடநாட்டுக் காங்கிரசு மாநாடுகளுக்கு நர்கிசையும் தேவானந்தையும் பிருதிவிராச கபூரையும், இராசகபூரையும், வேறுபல மீன்களையும் அழகர்களையும் அழைத்து வரவில்லையா? "என் பிரியமுள்ள குடிமக்களே! நீங்கள் என்னைப் பார்க்க வராவிட்டாலும், இத்தனை நடிக நடிகையரைக் காணவாகிலும் வரக்கூடாதா? இதோ பாருங்கள், கலைமண்டலத்தின் ஒளிமீன்கள் எத்தனையெத்தனை இங்கே என்று!"-இப்படி சச்சாநேரு வலை வீசினரே, பல நடிகர்களோடு தானும் இருந்து. அப்போதெல்லாம் இந்தக் காங்கிரசார், "நடிகர்களைக் காட்டியா கூட்டம் சேர்ப்பது? நாமென்ன திறமற்றவர்களா?" என்று நேருவிடம் கேட்கவில்லை. ஆனல் இன்று கொதித்துக் கிளம்பியிருக்கின்றனர்; குதித்துக் காட்டுகின்றனர், கூத்தாடிகளைக் காட்டி ஆச்சாரியார் கூட்டத்தைச் சேர்த்துவிட்டாரென. காங்கிரசார் அனைத்து இந்தியாவிலும் கொள்கையில்லாத கூத்தாடிகளாய் அலைகையில், மற்றவர்களைத் திட்டுவதற்கு உரிமையற்ருரோ!

இதைவிட மற்ருெரு வேதனையான நிகழ்ச்சியும் நடந்திருக்கிறது. ஆச்சாரியார் அனைத்து இந்தியாவை நேசித்தாலும், இந்தியின் ஆதிக்கத்தை எதிர்ப்பவர். அவரது மற்றக் கொள்கைகளைக் கண்டிக்கத் துணிவில்லாதவர்கள், ஆச்சாரியார் இந்தியின் பகைவர் என்ற செய்தியைப் பரப்புவதன்மூலம் அவரைத் தொலைத்துக் கட்டலாம் என்றெண்ணினர் போலும்! அந்தக் காலிகள் மாநாட்டுக்குள் நுழைந்து "ஆச்சாரியாரே! இந்தியில் பேசு! அன்றேல் இங்கிருந்து ஓடு!" என்று குரலெழுப்பியிருக்கின்றனர்; கூச்சலிட்டிருக்கின்றனர்; அத்தோடு அருவருக்கத் தக்க பல இழிசெயல்களையும் செய்திருக்கின்றனர். இது சுதந்தராக் கட்சி மாநாட்டில்தான் நடந்ததெனினும், நமக்கெல்லாம் விழிப்பூட்டும் சேதியுமாகும். ஆச்சாரியார் சுதந்தராக் கட்சியின் கொள்கைகளுக்காக மட்டும் அங்கே எதிர்க்கப்பட்டாரில்லை. தென்னகத்தாரின் நெஞ்சுரம் மிக்க இந்தி எதிர்ப்புக் கொள்கைகளுக்காகவும் எதிர்க்கப்பட்டிருக்கிருர்.

தென்னகத்திற்கு வருகின்ற வடநாட்டுத் தலைவர்களெல்லாம் நம்மை இழிவுபடுத்துவதுபோல் இந்தியில் பேசியபோதெல்லாம், நாம் பொறுமையுடன், கண்ணியத்துடன் நம் எதிர்ப்பைக் காட்டியிருக்கிறோம். இராம மனோகர லோகியா என்பார், ஆங்கிலம் அறிந்தவர்தான். அவர் தன்கொள்கைகளைப் பரப்ப நடத்தும் ஏட்டின் பெயரும் "Man kind"தான். அவர் அதை நடத்துவதும் ஆங்கில மொழியில்தான். ஆனலும் அவர் தென்னக மேடைகளில் ஏறும்போதெல்லாம் பிடிவாதமாகவே இந்தியில் பேசுகிருர். அப்படிப் பேசுவது அவர் வைத்திருக்கும் பதினறு திட்டங்களில் ஒன்ரும். ஈரோட்டில் கூடிய அவர்களது மாநாட்டில் இந்தியில்தான் பேசுவேன் என்று முரட்டுவாதம் செய்தார். தமிழகப் பிரதிநிதிகளே அவரின் கடுஞ் செயல் கண்டு வருந்தினர். ஆனல், துளியும் குழப்பம் நிகழவில்லை. தோழர் லோகியா சென்னையில் ஈரோட்டு மாநாட்டிற்குப் பின்னர் நடந்த கூட்டம் ஒன்றிலும் அதே பிடிவாதத்தைக் காட்டினர். விளைவு? அவர் மக்களைப் பார்த்துப் பேசுவதற்குப் பதிலாக, அவர்களெல்லாம் அமைதியாக வெளியேறிவிட்டதால், நாற்காலிகளைப் பார்த்து அழுதார். முன்பு ஆவடி மாநாட்டில் நடந்ததையும் அதற்குள் மறந்திருக்கமாட்டீர்கள். அங்கு பொருளாய்வுக்குழுக் கூட்டத்தில் பேச வந்த மொராச்சிக்கு இந்தியிலும் குசராத்தியிலும் உள்ள பயிற்சியைவிட ஆங்கிலத்தில் பயிற்சி உண்டு; பேசும் திறமை உண்டு. ஆனலும் பிடிவாதமாக. அங்கு திரண்டிருந்த தென்னக உறுப்பினர்களை அவமதிப்பதுபோல இந்தியில் பேசினர். தென்னக உறுப்பினர்கள் அவரைத் தமிழில் பேசும்படிகூடக் கட்டாயப்படுத்தவில்லை; எல்லோருக்கும் விளங்கும் ஆங்கிலத்தில் பேசும்படி வேண்டிக் கேட்டனர். பேசியவரும் ஆங்கிலத்தில் பேச வேண்டியோரும் காங்கிரசாரே! ஆனலும் தலைக்கிருக்குப் பிடித்த அந்த வடநாட்டமைச்சர் இந்தியிலேயே பேசுவேன் என்று பிடிவாதம் செய்தார். இறுதியில் நேரு தன் ஒளி முகத்தைக் காட்டி எல்லோரையும் நிறைவு செய்ய வேண்டியதாயிற்று. திருவாளர்கள் வெங்கட்டராமன், தேவநாராயணன் முதலிய பல உறுப்பினர்கள் பின்னர் பேசுகையில் தமிழிலேயே பேசினர். அவருள் ஒரு தோழர் "தமிழ்நாடு" நாளிதழின் செய்தியாளரிடம் இப்படிக் கூறினர்:

"ஆங்கிலம் தெரிந்த வடக்கத்தியர் இந்தியிலேயே பேசியதைக் கேட்ட தமிழர்கள் உள்ளம் எவ்வளவு புண்பட்டிருக்கும் என்பதைக் காட்டவே நாங்கள் தமிழில் பேசினேம்."

தமிழக உறுப்பினர்கள் இவ்வளவு வருத்தப்பட்டும், கண்ணியத்தோடு தம் கருத்தைத் தெரிவித்துமே, தமிழில் பேச வேண்டினர். ஆனல் துடுக்கு நிறைந்த வடவர்கள் ஆச்சாரியாரை "இந்தியில் பேச வேண்டும்!" என்று கட்டளையிட்டிருக்கின்றனர்; குழப்பம் விளைவித்திருக்கின்றனர். இதை எல்லாம் பார்த்தும் பண்டிதர் வாய் மூடிக்கிடக்கிருர். அதில் விந்தையில்லை! அவர்தான் ஏற்கனவே இந்தி எதிர்ப்பாளர்களை "முட்டாள்கள்! காட்டுமிராண்டிகள்!" எனப் பேசியவராயிற்றே! அவர் போகும் வழியில்தானே அவரது அடியாள்களும் போவார்கள்! ஆனல் இதுபோன்ற இழி செயல்கள் காங்கிரசார்க்கு வலிவைத் தாரா; தென்னகப் பிரிவினை கோரும் திராவிடர்க்குத்தான் வலிவைத்தரும்! இது உண்மை! உறுதி!

இத்தனை நிகழ்ச்சிகளையும் எண்ணிப் பார்க்கையில் நம் மனதில் படுவதே ஆச்சாரியருக்கும் பட்டிருக்கும். ஆனல் ஆச்சாரியாரால் வெளிப்படையாகச் சொல்லமுடியாத அதை நாம் சொல்வோம்: "நேருவின் ஒளி மங்குவதால் வெறிபிடித்தலைகின்றனர் வடவர். எப்படியும் இந்தியைத் திணித்து நம்மை அடக்க நினைக்கின்றனர் அக்கொடியோர். அதன் விளைவுகள்தான் இந்தக் குழப்பங்கள்! இதை மறுக்கவும் அழிக்கவும் உள்ள ஒரே வழி, தென்னகம் திராவிடர்க்கே, யாதலாம்!"

★

கல்லூரிக் கவியரங்கம்

4. எழில்

வணக்கவுரை

அன்னைத் தமிழுக்கும் அறிஞர்கள் அனைவருக்கும்
சென்னைப் புலவர்புகழ் சீர்மிகுமிக் கவியரங்கில்
முன்னை வணக்கங்கள் முழுதும் உரியதெனச்
சின்னவனும் அறிவில்நான் செப்புகிறேன், ஏற்றிடுவீர் !

அவையடக்கம்

முத்தமிழ்போல் வீற்றிருக்கும் மூன்றுபெரும் கவிஞர்களே !
வித்தகனுய்க் கவிதைகளை விரைவாக எழுதவில்லை !
சித்திரத்தை எழுதிடவே சிறுகுழந்தை முயல்வதுபோல்
அத்தினத்தில் சான்றோர்கள் அறைந்ததனைப் புதுப்பித்தேன் !

நன்றியுரை

கற்றுத் தெரிந்தபின் கவிதைகளை எழுதுவது
முற்றும் பொருத்தமென முடிவுதனைக் கொண்டஎனைச்
சற்றும் இகழாது, சபைநடுவே ஏற்றிவைத்த
உற்ற நண்பர்க்கும் உயர்ந்தோர்க்கும் நன்றிபல.

நூல்

பனித்துளி

விண்ணகத்தில் சலிப்படைந்து விளையாடப் பூவுலகில்,
மண்ணிடையே தோன்றிவளர் மரகதப்பசும் இலைகளிலே,
எண்ணியேதான் வந்தனையோ ! எனக்குரையாய், விண்மீனே !
கண்ணுக்குக் குளிர்ச்சியுடன், காட்டுகின்றாய் பேரெழிலை.

தொட்டால்நீ போகின்றாய் ! துளியுமுனக் கன்பில்லை !
விட்டால்நீ வருவாயோ ! விண்மீனும் பனித்துளியே !
முட்டாக்குத் துணிபோட்ட முகத்தழகி நானல்ல,
இட்டமுடன் நானினைத்தால் இருப்பாயோ, பனித்துளியே !

வெண்ணிலா

மொழியினிலே வளம்சேர்த்து, முத்தன்னக் கலைகளையே,
ஒழிவின்றிப் படித்தாலும் ஓயாத மகிழ்வுண்டோ !
எழுகின்ற குழலியைப்போல் இன்புடனே தவழ்ந்துவரும்
அழகுமிகும் வெண்ணிலவே ! ஆர்வமுடன் அழைக்கின்றேன்.

வானுலகின் வேந்தன்போல் வட்டமிடும் வெண்ணிலவே !
நானங்கு வந்தடையும் நாட்களுமே அதிகமில்லை !
தேனருந்திப் பாட்டிசைத்துத் திளைத்திருப்போம் சிறிதளவு;
மோனத்தில் நிலைத்திருப்போம்; முடிவினிலே கூடிடுவோம்.

மலர்

உலகத்தின் தன்மையினை உணர்ந்தபெரும் அறிஞன்போல்,
திலகத்தின் ஒளிகாட்டித் திகழ்பூவே ! சிரிக்கின்றாய் !
கலகத்தின் மிகுதியிலும் கரையாத உன்னழகைப்
பலகற்ற சான்றோரும் பண்புடனே விரும்பிடுவர் !

புதுமலரே ! உன்னெழிலில் பூவுலகம் மயங்கிடுதே !
மதுச்சுவையால் வண்டுகளை மாற்றுகிறாய், உன்பக்கம் !
இதுதகுமோ ! இன்மலரே ! இன்னும்சில நாட்களிலே,
மதியினையே உன்பக்கம் மாற்றுவையோ ! யாரறிவார் !

குழந்தை

உடல்குலுங்க ஆடுகிறாய் ! உளம்மகிழத் தாவுகிறாய் !
கடலலைபோல் தவழ்ந்துவரும், கன்னத்தில் சிரிப்பலைகள் !
இடுகின்ற உணவுண்டு, இருப்பாய்நீ தோட்டத்தில்,
படமெடுப்பேன் ! என்னுயிரே ! பைங்கிளியே ! வாராயோ !

அழகுமுகம் நகைக்கிறதே ! அன்புமலர் பூக்கிறதே !
குழந்தாய்,உன் மகிழ்ச்சிக்குக் கூறுவையோ காரணத்தை ?
எழுகின்றாய் ! அழுகின்றாய் ! இன்னமுமா உறங்கவில்லை ?
பழம்தருவேன் ! பேசாமற் பாய்மேலே படுத்துறங்கு.

கிளி

பச்சைச் சிறகடித்துப் பயிற்சியினால் கனியுண்டு,
இச்சையிலே விரைவூட்டி, எங்கேநீ செல்லுகிறாய் ?
அச்சமதைக் கொன்றிட்ட அழகா[illegible] பசுங்கிள்ளாய் !
நிச்சயமாய்ச் சொல்லுகிறேன் நீயேயென் வழிகாட்டி !

உன்போல வாழ்வினையே உரிமையுடன் துய்த்துவரும்
நன்பேறு கிட்டவில்லை ! நானதற்கு வருந்துகிறேன் !
தின்கின்ற பழங்களிலும் தீஞ்சுவையை நாடுகிறாய் !
இன்மையெனும் பேச்சில்லை ! இன்பம்தான் எப்பொழுதும் !

—இரா. சி. இராசகோபாலன்.



★

இலயோலாக் கல்லூரி
மாணவர் இவர். பெயர்
இரா. சி.
இராசகோபாலன்.

★

இரு மடல்கள்

"என்னை மறந்துவிடுங்கள். உங்களை மணந்துகொள்ள அருகதை அற்றவளாகிவிட்டேன். காரணம் இப்போது கேட்கவேண்டாம்; காலம் வரும்போது கூறுவேன். மலர்விழி"

அவனால் அந்தக் கடிதத்தை நம்ப முடியவில்லை. தான் காண்பது கனவல்ல என்பதற்காகத் தன் தொடையைக் கிள்ளிப் பார்த்துக்கொண்டான். "என்ன அப்படி இவள் அருகதையற்றுப் போனாள்? எனக்கேதும் புரியவில்லையே! ஐயோ! எங்கள் காதல் காவியம் முற்றுப் பெறாமலே முடிந்துவிட்டதே:" என்று முத்தழகன் மனம் வருந்தினான். அவனும் அவளும் ஒப்பற்ற காதலர்களாக உலகத்தினர் கண்முன் காட்சி தந்தனர். இவர்கள் இருவரும் மணக்கும் நாளை மகிழ்ச்சியோடு உலகம் எதிர்பார்த்தது. அந்த நேரத்தில் இப்படி ஒரு வெடிகுண்டை வீசி எறிந்தாள் மலர்விழி. இந்தச் சோக நாடகத்தின் கதாநாயகனான முத்தழகனுக்கே அது தெரியவில்லை என்றால் மூன்றாவது மனிதர்களுக்கு அது எப்படித் தெரியப் போகிறது? வாழ்வே இல்லாமலிருந்த மலர்விழி இடையிலே வாழ்வு பெற்றாள்; வாழ்வு பெற இருந்த நேரத்தில், அவள் வாழ்வில் ஒரு வல்லூறு புகுந்து இந்த வெண்புறாவை-அதன் வாழ்வைப் பாழாக்கியது அந்தச் சோகத் தொடர் கதைதான் கீழே காண்பது;

மலர்விழிக்குக் கண் தெரியாது; காது கேட்காது. வாயும் பேசாது இப்போதல்ல; பல ஆண்டுகளுக்கு முன்னர். சிறு வயதில் சிங்கப்பூரில் வசித்து வந்தாள் அவள் கண் தெரியும், காது கேட்கும்; வாயும் பேசும். இரண்டாம் உலகப் போரின்போது சிங்கப்பூரில் ஜப்பானியர் போட்ட குண்டுகள் மலர்விழியின் பார்வையைப் பிடுங்கி, வாயை அடைத்து, கேட்கும் திறனையும் பறித்துக்கொண்டு விட்டன. அவள் வாழ்வு கசங்கிய மலராக மாறியது. கொழுகொழு என வாழ வேண்டிய ஒரு பெண், எல்லாமிழந்து, நடைப்பிணமாய் மாறினாள். பரிதாபம் கொண்டனர் பலரும். ஆனால் அது இழந்த பார்வையை மீட்டுத் தர முடியுமா?

போர் முடிந்த பிறகு, அதன் விளைவுகளைக் கண்டறிய வேண்டி சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்த ஓர் அமெரிக்கக் குழுவின் தலைவியான மார்கரெட் சீமாட்டி, மலர்விழியின் சோகக்கதையைக் கேட்டாள். குண்டுகள் அவளுக்குப் பக்கத்துத் தெருவில் தாம் வெடித்தன என்று தெரிந்துகொண்டாள்; ஆகவே வெறும் அதிர்ச்சியால் மட்டுமே, அவள் பார்வையையும் பேச்சையும், கேட்பதையும் இழந்திருக்கக்கூடும் என்று ஆராய்ந்து அறிந்துகொண்டாள். மலர்விழிக்குத் தகுந்த சிகிச்சை செய்தால், அவள் நிச்சயமாக இழந்தவற்றைப் பெறக்கூடும் என்று திடமாக நம்பினாள். அவளுடைய கருத்தை அவளுடன் வந்த இரண்டு மருத்துவர்கள் ஆமோதித்தனர். மலர்விழியின் பெற்றோர், உறவினர் யாருமே இப்போது எங்கு இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க முடியாத நிலையில் இருந்ததால், அவள் அங்கேயே பல வீடுகளில் வேலை செய்து பிழைத்துவந்தாள். ஆகவே அவள் ஓர் அனாதை என்றறிந்து கொண்ட மார்கரெட் அவளை ஒரு விதத் துன்பமும் இல்லாமல், தன்னுடன் அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்லமுடியும் என்று முடிவுசெய்து, சைகைமூலம் மலர்விழியைத் தன்னுடன் வரமுடியுமா என்று கேட்டாள். முதலில் மறுத்த மலர்விழி, பிறகு அண்டை அயலில் இருந்தவர்கள் வற்புறுத்திக் கூறியதன் விளைவாய் ஒத்துக்கொண்டாள். தான் இழந்ததை எல்லாம் பெற்ற பிறகு, மீண்டும் அதே இடத்திற்கு வருவதாகக் கூறி பிரியா விடைபெற்றுப் புறப்பட்டாள். மார்கரெட்டும் அந்த இடத்தைக் குறித்துக்கொண்டாள்.

★

மார்கரெட் மலர்விழியை அழைத்துக்கொண்டு அமெரிக்காவிற்குச் சென்றாள். அங்கு குருடு, செவிடு, ஊமைத்தனத்தைப் போக்கும் புகழ் பெற்ற ஒரு மருத்துவ நிலையத்தில் சேர்க்கப்பட்டாள் மலர்விழி பலநாட்கள் பல மருத்துவர்களின் கண்காணிப்பில் இருந்த பிறகு மலர்விழிக்கு இன்னின்ன மருத்துவ முறைகளைக் கையாள்வது என்று முடிவு செய்த பிறகு, சிகிச்சையைச் செய்யத் தொடங்கினர். மலர்விழிக்கு முதலில் அந்த மருத்துவ நிலையமும், அதில் இருந்த பெரிய மருத்துவர்களும், அவர்களின் துணைவர்களையும் பார்க்க என்னமோ, ஏதோ என்று தோன்றியது. பயமில்லாவிட்டாலும், ஏதோ ஒரு புதிய இடத்தில், பல அந்நியர்களிடையே இருக்கிறோம் என்ற பிரமை இருக்கத்தான் செய்தது, நாளடைவில், அந்தப் பிரமையும் நீங்கிவிட்டது. சிகிச்சை வெற்றி அடையக்கூடும் என்று மருத்துவர்களுக்கு நம்பிக்கை ஏற்படத் தொடங்கிய பிறகுதான், அவர்கள் தொடர்ந்து, தங்கள் மருத்துவத்தை நடத்தலாயினர்.

மலர்விழிக்கு முதலில் சிறிது கேட்கத் தொடங்கியது; மற்ற புலன்கள் அவ்வளவு சீக்கிரமாக வேலை, செய்யமுடியவில்லை. என்றாலும் மருத்துவர்கள் விடாமல் தாங்கள் சிகிச்சையை நடத்தலாயினர். அவளுக்கு மேலும் நன்றாகப் பார்வை வரத் தொடங்கியது. நம்பிக்கை நட்சத்திரம் தோன்றியதைக் கண்டு, மருத்துவர்கள் கண்ணையும் காணும் சக்திபெறச் செய்யமுடியும் என்று திடமாக நம்பிப் பணியாற்றி வந்தார்கள்.

மலர்விழிக்குக் கண் பார்வை திரும்பி வரக்கூடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது; அப்படிக் கிடைத்தாலும் முழுப் பார்வையையும் அவள் பெறமுடியாது என்ற ஐயம் இருந்த போதிலும், குறிப்பிட்ட ஓர் அளவிற்குப் பார்வை பெறக்கூடும் என்று தோன்றியது அதற்கேற்பச் சில நாட்களில் மலர்விழிக்கு எதிரேயுள்ள பெரிய பொருள்கள், பெரிய உருவங்கள் தெரிந்தன; அவள் சிறிது சிறிதாகத் தான் பார்வை பெற்று வருவதை உணர்ந்தாள்; அகமகிழ்ந்தாள். விஞ்ஞானத்தின் விந்தைகள் என்ன என்பதை அவளால் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. அவள் ஒரு காலத்திலும் நினைக்கவில்லை, தான் இழந்த பார்வையை, கேட்பதைப் பெறக்கூடும் என்று. அந்தப் பெருமிதத்தில் அவள் உடல் பூரித்தது; உடலெங்கும் பருவப்பெண்ணுக்குரிய பளபளப்பு தோன்றலாயிற்று. பூத்துக்குலுங்கும் பூங்கொடிபோல் காட்சியளித்தாள். அவர் உடலில் ஏற்பட்டுவரும் மலர்ச்சியைக் கண்ட மருத்துவர்கள், இவள் நிச்சயம் பார்வை பெறுவாள் என்று நம்பினார்கள். சிறிது சிறிதாக அவர்கள் நம்பிக்கை வளரும் வகையில் மலர்விழியின் கண்கள் எதிரொலித்தன. இந்த நம்பிக்கையினூடே, மருத்துவர்கள் அவளைப் பேச வைக்கும் பெரும் பணியில் ஈடுபட்டனர். இந்தப் பொன்னவிர் மேனிப் பூங்கொடியாள், பேசினால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று மார்கரெட் உள்ளிட்ட பலரும் எண்ணி எண்ணி, அந்த நாளை வெகு ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

கண் பார்வையைப் பூராவாக மலர்விழி பெறவில்லை என்றாலும், ஓரளவு பார்க்கும் சக்தியைப் பெற்றாள் என்று கூறலாம். ஆனால் கண் எவ்வளவு சீக்கிரம் சிகிச்சைக்கு உட்பட்டுப் பார்வை பெறத் தொடங்கியதோ, அந்த அளவிற்கு காதும், வாயும் சிகிச்சைக்கு உட்படவில்லை. மலர்விழிக்குப் பேசும் சக்தியும், கேட்கும் சக்தியும் திரும்ப வராது என்று மருத்துவர்கள் நினைக்கும் அளவிற்கு அறிகுறிகள் தோன்றின. சோர்வடைந்த மருத்துவர்கள் சிறிது சிறிதாகத் தங்கள் சிகிச்சையைக் குறைத்துக்கொண்டு மலர்விழியை விரைவில் மருத்துவ விடுதியிலிருந்து அனுப்பிவிட முடிவு செய்தார்கள். ஆனால் மலர்விழி படு செவிடு என்ற நிலையிலிருந்து மாறும்வரையில், வாயினால் சில குறிகளைப் பேசவாவது முடியும் வரையில் தங்கள் சிகிச்சையைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்தார்கள். அந்தச் சிகிச்சைத் தொடர்ந்து நடைபெற்றது; அது மட்டுமல்ல; பலன்தரவும் செய்தது. படு செவிட்டுத்தனம் நீங்கியது; வாயினால் ஓர் இரு குறிகளைப் பேசவும் முடிந்தது. அந்த அளவிற்கு மருத்துவர்கள் தங்கள் சிகிச்சையை முடித்துக்கொண்டு, மலர்விழியை அனுப்பி வைத்தார்கள்.

மார்கரெட் மலர்விழி முழுவதும் இழந்ததைப் பெறவில்லையே என்ற வருத்தம் ஒருபுறம் இருந்தபோதிலும், இவ்வளவு தூரமாவது சிகிச்சை வெற்றி பெற்றதே என்று மனம் மகிழ்ந்தாள். கண் பார்வையாவது முழுவதும் பெற்றிருக்கக்கூடாதா, அதில்கூட ஓர் அளவுதானே வெற்றி பெற முடிந்தது என்ற வருத்தம் ஒருபுறம் இருக்கத்தான் செய்தது. சிறிது காலம் இடைவெளிக்குப் பிறகு, மீண்டும் சிகிச்சையைத் தொடர்ந்தால், பலன் பெறக்கூடும் என்று தன்னைத்தானே சமாதானம் செய்துகொண்டாள்; மலர்விழியைத் தன்னுடனே வைத்துக்கொண்டாள்.

கண் இழந்தோர், கால் இழந்தோர், முதலிய பலருக்கும் உதவும் வகையில் அமைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய நிறுவனத்தின் தலைவியாக மார்கரெட் இருந்தாள். அங்கே மலர்விழி சேர்க்கப்பட்டாள். உறுப்புகள் குறைவாக இருந்தவர்கள், தங்கள் தங்களாலான சிறு தொழில்களைச் செய்து வந்தார்கள். மலர்விழி குருடர்கள் படிக்கும் ஒருவகை எழுத்துக்களை பிரெய்ல் முறையில் பயில ஆரம்பித்தாள். அவள் கல்விமட்டும் பயிலவில்லை அங்கே: காதலையும் பயின்றாள்.....

மலேயாவில் பயின்று விட்டுப் பட்டம் பெற்ற முத்தழகன் என்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞன் மேற் படிப்புக்காக அமெரிக்காவிற்கு வந்திருந்தான். அவன் குருடர்களுக்கு பிரெய்ல் முறையில் கல்வி கற்பிப்பதில் நிபுணன் என்ற பேர் பெற்றவன். எனவே மார்கரெட் சீமாட்டியின் அநாதைப் பள்ளியில் குருடர் கல்வித்துறைப் பகுதியில் ஓய்வு நேரங்களில் பணியாற்றி வந்தான். அந்தச் சமயத்தில்தான் மலர்விழி அங்கு சேர்ப்பிக்கப்பட்டாள். இருவரும் நெருங்கிப் பழக நேரிட்டதும், மலர்விழியின் சோகக் கதையை முத்தழகன் கேட்டறிந்து கொண்டான். முத்தழகனைப்பற்றிய முழு விவரங்களையும் மலர்விழி தெரிந்துகொண்டாள். இருவரிடையேயும் காதல் ஏற்பட்டதில வியப்பில்லை; மார்கரெட்டுக்கும் செய்தி தெரிந்தது. அவளும் ஒரு தடையும் கூறவில்லை. இருவரும் ஒருமித்த கருத்துடையவர்களாக இருப்பார்களானால் நாம் ஏன் தடை கூற வேண்டும் என்ற பரந்த எண்ணத்தில் அவர்கள் காதலை அவள் மனமார வரவேற்றாள். முத்தழகன் - மலர்விழி ஒப்பற்ற காதல் இணை என்று அனைவரும் மகிழ்ந்தனர்; திருமணம் எப்போது என்று கேட்டனர் பலர். தாயகம் திரும்பியதும் என்றான் முத்தழகன். என் தாய் அனுமதித்ததும் உடனே என்றாள் மலர்விழி. தாய் என்று அவள் குறிப்பிட்டது மார்கரெட்டை. அவளும் இன்னும் இருவரும் நெருங்கிப் பழகட்டும் என்று சும்மா இருந்து வந்தாள். பூங்காக்களும், திரைப்படக் காட்சிகளுக்கும், நாடகங்களுக்கும் முத்தழகன் மலர்விழியை அழைத்துக் கொண்டு செல்ல அனுமதித்தாள். கண்டதும் காதல். பிறகு பிரிதல் என்று இருத்தல்கூடாது; மனமொத்த காதலர்களாக இருக்க வேண்டும்; உயிருக்கு உயிர் என்று இருத்தல் நலம் என்றெல்லாம் மார்கரெட் விரும்பினாள். அதற்கேற்பப் பல நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தி இருவரும் நெருங்கிப் பழக வழிவகைகள் செய்தாள். மலர்விழி பிரெயில் முறையில் நன்றாகப் படிக்கக் கற்றுக் கொண்டாள்.

இனி, மலர்விழியைத்தான் வைத்துக்கொண்டிருக்க வேண்டாம், அவள் தன் தாய்நாடு திரும்பட்டும் என்று மார்கரெட் முடிவு செய்தாள். அவளைத் தாய்நாட்டுக்கு அனுப்புவதன்மூலம், அவள் திருமணம் விரைவில் நடக்கும் என்று அவள் எதிர்பார்த்தாள். தன் குழுவினரைக் கலந்தாலோசித்து மலர்விழியைத் தாய்நாட்டுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்தாள். மலர்விழியும் ஒப்புக் கொண்டாள். முத்தழகனுக்கு அங்கே இன்னும் இரண்டு மாதகாலம் பயிற்சி

—13-ம் பக்கம் —

முதுமை :

கடல் நீர் பச்சையா ? நீலமா ? கடலை நெருங்கிப் பார்த்தால் இந்த ஐயம் எழுவதியற்கை. வாழ்க்கையை நெருங்கிப் பார்த்தாலும் அப்படியே ஓர் ஐயப்பாடு.

வாழ்க்கை துன்பமானதா ? இன்பமானதா ? இரண்டுமே கலந்திருக்கிறது. சோமாவதியை அழைத்துச் சென்று ஒளிந்து வாழ்வதில் அவன் பட்டபாடுகள் ஆயிரமிருக்கலாம். அத்தனையும் துன்பமானவைதாம். ஆனால் அந்தத் துன்பங்களுக்கிடையே தன் காதலியை அடைந்துவிட்டோம் என்ற இன்ப எண்ணங்கள் விளைகின்றன; மகிழ்ச்சி தழைக்கிறது. காவல் படையினர் கண்டுபிடித்துவிடுவரோ என்ற மன வேதனை இருக்கின்ற நேரத்திலேயே, காதல் பெண் பக்கத்திலிருக்கிறாள் என்ற ஆனந்தமும் இருக்கத்தான் செய்கிறது. சோமாவதியும் இப்படித்தான். இன்பத்தில் துன்பமும் துன்பத்தில் இன்பமும் கண்டாள். கடலின் நிறம்போலத்தான் வாழ்க்கையின் போக்கும். அலையின் வண்ணம் பச்சையா ? நீலமா ? அந்த மயக்கம்தான், வாழ்க்கையைச் சொல்வதிலும் !

முத்துவீரப்பர் அழைத்தபோது எளிதாகப் புறப்பட்டுவிடவில்லை, குமரன். ஆண்டாண்டு காலமாகத் தன் நெஞ்சில் தேக்கி வைத்திருந்த ஆசை வெள்ளம் உடைத்துப் பொத்துக் கிளம்பிவிட்டது. இனி ஏதும் வழியில்லை, இழந்ததை மீட்க.

சோமாவதி சூடியிருந்த மலர்கள் கருகி விழுந்தபோது அவன் நெஞ்சம் கவலைப்படவில்லை. அவள் உடுத்திய ஆடைகள் கிழிந்தபோதுகூட அவன் வேதனைப்படவில்லை. அவள் கண்ணுக்கிட்ட மை கரைந்தழிந்தபோதுகூட அவள் அலறவில்லை. ஆனால் அவளே அழிந்தபோது அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை அவளது அலங்காரங்களெல்லாம் அவன் கண்களில்தான் நின்றன. அவளது ஆசை மட்டும் அவன் நெஞ்சிலே நின்றது. அதனால்தான் அவனால் பொறுக்க முடியவில்லை. இத்தனை நாளும் வாழ்க்கையில் இன்பம் துன்பமாகவும், துன்பம் இன்பமாகவும் காட்சியளிக்கிறது என்றெண்ணித் தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டவன் இன்னும் ஏமாறத் தயாராய் இல்லை. இப்போது அவனுக்கு உறுதியாகத் தெரிந்துவிட்டது, வாழ்க்கை துன்பமானதென்று. காட்சி மயக்கம் சில வேளைகளில் கடலின் நிறத்தைப்பச்சையாகக் காட்டினாலும் உண்மையில் அதன் நிறம் நீலமே. இந்த எண்ணம் வலுவாக, ஆழமாக உருவெடுத்துவிட்டது அவனுக்கு.

அதனால்தான் முத்துவீரப்பர் அழைத்தபோது அவன் வர மறுத்தது. கண்ணிறைந்தவளையே தீ தின்றுவிட்டது. இனி என்ன இருக்கிறது ? காதலிக்க வழியற்ற மனிதன் வாழ்ந்தென்ன ? போயென்ன ? - முத்துவீரப்பரோ இந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

''தம்பி ! இனிமேல்தான் உன் கடமை தொடங்குகிறது. இத்தனை நாளும் நீ ஆடிப் பாடினாய். இனி ஒரு நாள்கூட நீ ஆடி ஓடமுடியாது; இருந்து செயலாற்ற வேண்டும் ! உன்னைத் தவிர வேறு நம்பிக்கையற்ற இந்தப் புதிய பிறவிக்கு நீ செய்யப் போவதென்ன ? சோமாவதியைப்போல் நீயும் இந்தக் குழந்தையை ஏமாற்றப் போகிறாயா ?''

குதிரையைச் சற்று நிறுத்திக் கொண்டு சொன்னான்:

''இந்தக் குமரன் ஓர் ஏமாற்றக் காடு. என்னை நம்பி எப்படி வாழப் போகிறது, இந்தக் குழந்தை ? எனக்கு வீண் நப்பாசைகளை மூட்டாதீர்கள் !''

குமரனின் சொற்களைக் கேட்ட பெரியவர் அவனது இடிந்த இதயத்தை எண்ணி நொந்தார்.

''தம்பீ ! எதிரில் தெரியும் ஆலமரத்தைப் பார்த்தாயா ? அது ஈன்றுவிடும் விழுதுகள்தான், அது நசித்த காலத்திலும் அதைக் காப்பாற்றுகின்றன. நீ பெறும் குழந்தைகள்தான் உனது முதுமையிலும் உன்னைக் காப்பாற்றப் போகின்றன. நீ எதற்கு வாழ வேண்டுமென்பாய் ! ஆலமரம் எத்தனை வகைகளில் பயன்படுகிறது ? அதன் இலையும் சரி; நிழலும் சரி; கிளையும் சரி; விழுதும் சரி; எல்லாம் பயன்படுகின்றன இந்த மக்களுக்கு. அதுபோல்தான் உன் வாழ்வும். எல்லார்க்கும் எல்லாம் என்னும் இடம் நோக்கி நடக்கப் போகின்ற நீ, வரும் நாளில் இந்தத் தமிழ்ச் சமுதாயத்தின் மானத்தை மண்ணெங்கும் நிலைநாட்டப் போகிறாய். அந்தப் பெருமைத் திருவிழாவை முழக்க விழையும் எங்கள் இதழுக்கு, உன் தடந்தோள்களே உதவப் போகின்றன. சிங்களவர்கள் மேல் நமக்குத் தனிப்பட்ட பகையில்லை; வெறுப்பில்லை. ஆனால் தீட்டிய மரத்திலேயே பதம்பார்க்கும் வெறி நிலையை எந்த மனிதனும் ஒப்புக் கொள்ளப் போவதில்லை ! உழக்கூடத் தெரியாதிருந்தவர்களிடம், நாம் உழவின் பெருமையைச் சொல்லி, பொன் மணிகளை விளைத்துக் காட்டினோம். உழவுக்காகவே தமிழர் பலரை இங்கிருந்து ஆசை காட்டி அழைத்துச் சென்ற அவர்கள், உதவியவர்கள் கழுத்துக்கே கத்தியைப் பிடிப்பதென்றால்...''

''ஏற்றுக்கொள்ளலாமா அந்த இழி செயலை ?'' என்று கேட்டார் மருதவாணர், முத்துவீரப்பர் அவர் சொல்லை முடிப்பதற்குள். முத்துவீரப்பர் நிலையை அறிந்துகொண்ட அனைவரும் குமரனை ஊக்கினார்கள். குமரன் எதையும் சொல்லமுடியாமல் அலமந்தான்.

குதிரை பல இடங்களையும் தாண்டிக் கொண்டு சென்றது. இங்குள்ள வளங்களை அணுகினாலே போதும்; ஒன்று பத்தாக விளையும். திரை கடலோடித் திரவியம் தேடப் புறப்பட்டு இவர்கள் பட்டபாடு போதும். ஆனால் கொட்டிய குருதிக்கு வட்டியும் முதலுமாய் வாங்காவிட்டால்...?-உடல் துடித்ததெனினும் அவனது சிந்தனை அலைபாய்ந்தது.

''துட்ட கமுனுவை எதிர்த்துச் சென்ற தமிழ் மன்னன் முன்னேற்பாடுகளில்லாததால் கெட்டழிந்தான். நாம் தக்க ஏற்பாடுகளொடு செல்வோம் ஒவ்வொரு கல்லாய் இன்றுமுதல் அடுக்குவோம். திடீரென்று கோட்டையை எழுப்பிவிட முடியாதல்லவா!'' என்றார் மருதவாணர்.

தொண்டியின் எல்லையை மிதித்ததும் மக்கள் அளித்த மரியாதையைப் பார்த்து, முத்துவீரப்பரின் தகுதியை அறிந்துகொண்டான் குமரன். ஆமாம் ! தமிழகத்தில் இருக்கும் மட்டும் முத்துவீரப்பரால் எதுவும் செய்யமுடியும்; ஒத்துக்கொண்டது அவன் மனம். ஆனால் தனக்காக எல்லாம் இழந்த சோமாவின் உறவினர்களையா பழி வாங்குவது ?

★

முத்துப்பட்டணம் தொண்டியை ஒட்டியிருந்த கலைக்கூடம் மட்டுமில்லை; முத்துச்சந்தைக்காரர்களின் சொந்த நிலம்கூட. மதுரைப் பாண்டியன் ஆட்சிக்குட்பட்ட குறுநில மன்னர்களுள் ஒருவரான திருமுடிக்காரியார் அந்தப் பட்டணத்தை ஆண்டுவந்தார். தொண்டியின் பாதுகாப்பு அவர் கையிலிருந்தது. தொடக்கம்முதல் முடிவுவரை குமரன் அடைந்த ஏமாற்றங்களைச் சொல்லிமுடித்தார், முத்துவீரப்பர். அத்தனையும் கேட்ட திருமுடிக்காரியார் அவனது வாளையும் தோளையும் புகழ்ந்து தன் காவற்படையில் சேர்த்துக்கொண்டார். காரியாருக்கு இந்த நெய்தல் நிலக்கோட்டை ஒன்றுபோக மலைக் கோட்டை ஒன்றும் உண்டு. பெரிய குளத்தை அடுத்த மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலில் இருந்த அந்தக் கோட்டைக்குக் காவல்தலைவர் குன்றெறிந்தார். கொளுத்தும் கோடை நாட்களில் காரியாரும் பாண்டியரும் வந்து தங்கிப்போவதற்கென்றே அக் கோட்டை எழுப்பப்பட்டது. கோட்டை பாதுகாப்பாக அமைந்ததால்,காட்டிலே பல்வகைப் பயிர் செய்யவும் மரங்கள் வளர்க்கவும் மக்கள் திரண்டிருந்தனர். மதுரையும் தொண்டியும் கொதித்துக் கொண்டிருக்கும் நேரத்தில்கூட இங்கு இளங்காற்று வீசும். அதனால் கோடையில் இங்கு வேட்டையாடவும் இளைப் பாரவும் பாண்டிய மன்னரும் திருமுடிக் காரியும் வந்துபோவர்.

அங்கிருந்த எல்லைக் காவல்படையில்தான் தன்னுடன் அழைத்து வந்திருந்த குமரனைச் சேர்த்துவிட்டார். காரியார். அவனுக்குக் கோட்டையின் நுட்பங்களையெல்லாம் சொல்லிவந்த அவர், ''இன்றுமுதல் விற்படைத்தலைவர் குன்றெறிந்தார் அவர்களுக்கு நீ உதவியாளன் !'' என்று சொன்னார். அதே நேரத்தில் எதிரில் வந்த குன்றெறிந்தார் வணக்கம் செலுத்தினார்.

புதிதாக ஒருவன் வேலைக்குச் சேரும் போது பெரும்பாலும் எந்த இடத்திலும் வெறுப்பைச் சந்திக்கவேண்டிவரும். புதிதாக வந்தவன் தங்கட்குத் தொடர்பில்லாத பகுதியில் சேர்க்கப்பட்டிருந்தாலும்,ஏற்கனவே இருந்தவர்களுக்குப் புதிதாக வந்தவன் வெறுப்பாகத்தான் படுவான். குமரனையோ குன்றெறிந்தார் முழு மனதோடு வரவேற்றார். அவனது திறமையை அறிந்து. எல்லோரும் அவனை நேசித்தனர்.

★

தந்தையை எதிர்த்துக்கொண்டு கொத்தமல்லி மலைக்குன்றுகளில் காலங் கழித்த துட்டகமுனுவுக்கு வாய்த்த தோழர்கள் பத்துப்பேரும் ஒவ்வொரு துறையிலும் வல்லவர்கள். புருவின் விழியைக் குறி வைத்து அம்பெய்வான் ஒருவன்; அடிமரத்தைப் பிடுங்கி அடி கொடுப்பானும் இன்னொருவன்; மத களிறையும் கிழித்தெறியும் திறமைக் காரன் இன்னொருவன்; மின்னென விரைந்து எதிரியின் உயிரை இடியென முடித்து வாகை சூடுவதில் கெட்டிக் காரர்கள் இவர்கள் பத்துப்பேரும். இப்படிச் சிங்களவரால் பாராட்டப் படும் நந்திமித்திரன், சூரநிமலன், சேரபுத்ராபயன், கஞ்சதேவன், பூசதேவன், வாசவன் ஆகிய இப்பத்துப் பேரையும் தான் துட்டகமுனு தேர்ந்தெடுத்தான். அந்தப்பத்துப்பேரும்ஆளுக்குப்பத்துப் பேரைத் தேர்ந்தெடுத்தனர். அவர்கள் தத்தமக்குப் பத்துப் பேரைச் சேர்த்தனர். இப்படிப் பெருகி உயர்ந்தது துட்டகமுனுவின் படை. முதல் பத்துப் பேர் எடுத்துக்கொண்ட நூறு பேரில் ஒருவன்தான் குணதிலகே. அடர்ந்து விரிந்த மார்பும், எடுப்பான தோளும் அவனது மறத்தை எடுத்துக்காட்டின வெறிபிடித்த வேங்கையாய் அவன் தன் மனதுக்குள் ஒரு திட்டத்தை வரைந்துகொண்டிருந்தான். அங்கே அவன் எல்லா இன்பங்களையும் சந்தித்துக்கொண்டுதானிருந்தான். ஆனாலும் ஆசை... கட்டுப்பாடற்று வளர்ந்து கொண்டிருந்தது. மரத்துக்குப் பக்கத்தில் வளர்ந்தாலும் புல் உயரமாய் வளர்வதில்லை. புல்லுருவி மரத்தைத் தழுவிக்கொண்டே விரைந்து வளர்ந்து அதன் உச்சிவரைக்கும் ஓடிவிடுகிறது.

துட்டகமுனுவின் அருகில் இருந்த குணதிலகேயின் நெஞ்சத்தாசைகளும் யாரையும் கேட்காமல் வளர்ந்தன. அவன் தனது திட்டங்களுக்கு ஒரு கருவியாக அமரசேனையைப் பயன்படுத்தினான். அமரசேனேயும் யார் யாரையோ தன் ஆசைகளுக்குப்

— 7-ம் பக்கம் —

★ மா.பாண்டியன் ★

அங்கேரி

அங்கேரி ஐரோப்பாவின் கிழக்குத் திக்கில் உள்ள ஒரு சிறிய நாடு. இதன் பரப்பு 35,919 சதுர கல்கள். இதன் மக்கள் தொகை 98,12,000.

அங்கேரியின் பெரும்பான்மையான நிலம் சமதளப் பரப்பு. மத்திய ஐரோப்பாவின் மிகப் பெரியதும், கண்ணைக் கவரக்கூடியதுமான ஏரி இங்குதான் அமையப்பெற்றுள்ளது. இதை சல டோன் என்று வழங்குகின்றனர். 232 கல் பரப்பளவு இது பரவியுள்ளது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்தும் மக்கள் இதைப் பார்ப்பதற்கென வருகின்றனர்.

அங்கேரியில் உள்ள பல ஆறுகளில் டான்யூப் என்பது மிகப் பெரியது. இந்த நாட்டின் தலைநகரம் புதாபெசுட் என்பது. இந்த நகரத்தின் மக்கள் தொகை இங்கு நெருக்கமாகப் பரவியுள்ளது. உலகத்தின் அழகிற்குப் பெயர் பெற்ற பல நகரங்களுடன் இதை ஒப்பிட்டுக் கூறலாம்.

உலகத்தின் ஊற்றுக்களில் அங்கேரியில் உள்ளவை புகழ் பெற்றவை. இதயநோய் வாய்ப்பட்டோருக்கு இவ் ஊற்றுக்களில் உள்ள பல தாதுப் பொருள்கள் பெரிதும் நிவாரணம் அளித்துதவுகின்றன. அதனுல் வங்கக் கவியரசர் ரவீந்திரநாத் தாகூர் இதய நோயால் அவதியுற்றபோது, 1936-ம் ஆண்டில் அங்கேரிக்குச் சென்று தங்கினர். இவ்வித ஊற்றுக்கள் ஒன்றிரண்டல்ல; எண்ணிறந்தவை இங்கு இலங்குகின்றன. கவியரசர் ரவீந்திரர் இங்கு வந்து தங்கியதை நினைவூட்ட, அவரது உருவச்சிலை இங்குள்ள ஆஸ்பத்திரிகளுள் ஒன்றில் அமைக்கப் பட்டுள்ளது.

ஆட்சியின் வசதியை முன்னிட்டு, இந்த நாடு பதினறு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தியத் துணைக் கண்டத்தில் அரசியல் அமைப்புச் சட்டம் சனவரி 26-ந் தேதி அமலாவதுபோல் அங்கேரியில் ஆகஸ்ட் மாதம் 20-ந் தேதி தொடங்கியதால், இத்த நாளை ஆண்டுதோறும் அங்கேரி வாசிகள் கொண்டாடுகின்றனர்.

சென்ற பத்தாண்டுகளாகத்தான் அங்கேரியில் குடியரசு முறையைக் காண்கிறோம். இதற்கு முன்பு அங்கேரியில் எழுத்தளவில் அரசாட்சி முறை எதுவும் இருந்ததில்லை. அவ்வப்போது, தாற்காலிகமாகச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டபோதிலும் அவைகளைத் திட்டவட்டமான, நிரந்தரமான சட்டங்கள் என்று கூறுவதற்கில்லை. சகலவித வசதிகள் அமையப் பெற்றதும், சமூகப் பண்பாடு, உறுதியான பொருளாதார நிலை ஆகிய உறுப்புகளுடன் திகழும் ஆட்சிமுறை அங்கேரியில் 1919-ம் ஆண்டில்தான் உருவாகியது. ஆயினும், இந்நிலையிலும் நிலையாக நிற்க இயலாத படி வேற்று நாட்டினர் தம் ஆட்சியால் அங்கேரியை வாட்டி வந்தனர். இரண்டாவது உலகப் பெரும்போர் முடிவுற்று, இட்லரின் ஏகாதிபத்தியக் கொடுங்கோலாட்சி வீழ்ச்சியடைந்ததும், அங்கேரி முன்போல் தலை நிமிர்ந்து நடக்கலாயிற்று. தனது நேச நாடுகளின் அறிவியல், அரசியல் உதவியைக் கொண்டு, மிகவும் கடுமையாக உழைத்து, சீரழிந்து கிடந்த தன்னைச் சுதாரித்துக்கொண்டு நிற்கின்றது இன்றைய அங்கேரி. இவ்வித முன்னேற்றப் பாதையில்தான் அங்கேரி குடியரசு முறையில் அடி எடுத்து வைக்கத் தொடங்கியது.

ஆக்கத் துறையில் உலகத்திற்கே அங்கேரி ஒரு எடுத்துக்காட்டாக நின்றுள்ளது.

இதன் அரசியல் சட்டம் உழைப்பாளிகள் உழவர்கள் ஆசிரியர்களின் நாடு என்று பிரகடனம் செய்கின்றது. மக்களை ஆளும்முறை, கூட்டுறவு முறை, நாட்டில் கையாளப்பட்டு வரும் உற்பத்தி முறை ஆகிய நடவடிக்கைகள் யாவும் சமூகத்தின் அம்சம் என்றே கருதப்படுகின்றன. ஒன்று கவனிக்கற்பாலது - இங்கு மக்கள் கூலிக்கு மாரடிப்பவர்கள் அல்ல; அவனவன் தன் உழைப்பிற்கேற்ற பலனைப் பெறும் அதிகாரம் அவனவனுக்கு உண்டு. நாட்டின் ஆதாயம் முழுவதும் மக்களிடையே பங்கிடப்படுகிறது. வாழ்க்கைத் தரனை உயர்த்துவதில் சுய அக்கறை இந்த நாட்டின் ஒவ்வொருவரிடமும் இருப்பது தெளிவு.

அரசாட்சி பீடத்தில் அமர்த்தப்படுவோரும் நிர்வாகத்தை அமலாக்குவோரும் உழைப்பாளிகளால் தெரிந்தெடுக்கப்படுபவர்தாம். இன்று பல அல்லல்களுக்குப் பிறகு இந்த நாட்டிற்கும் ஒரு அரசியல் திட்டவட்டமாக அமைந்திருப்பது ஒரு குறிப்பிடத் தக்க சாதனையே ஆகும். ஒரு வரையறையின்றி, கட்டுப்பாடற்ற முறையில் பல நாட்கள் அவதியுற்றபின் ஒரு கட்டுப்பாடுள்ள ஆட்சிக்கு உட்படுவது ஒரு திடீர்ச் சாதனையே என்றுல் மிகையாகாது. அங்கேரியின் முன்னேற்றமும் இப்படித் தாவிக் குதிக்கும் போக்கென்றே கருதவேண்டும்.

இன்றைய அங்கேரியில் வேலையின்மை என்பது அகற்றப்பட்டுள்ளது. நாடிய வேலை கிடைக்காது என்பதில்லை; ஆயினும் ஆற்றலுக்கேற்ற ஊதியமும் கிடைக்கத்தான் செய்யும். சிறந்த சாதனைக்கேற்ற பலனும் சிறந்ததாகவே இருக்கும். தொழில் நிலையங்களில் திறம்பட உழைக்கும் நுணுக்க நிபுணர்களுக்கு அவைகளின் ஆதாயத்திலும் பங்கு உண்டு. புத்தம் புதுக் கண்டுபிடிப்புகளுக்குத் தனியாக ஊதிய உரிமை உண்டு. உழைப்பு மட்டுந்தானு? ஓய்வில்லையா என்று வியக்க வேண்டாம். விடுமுறைகளும் விடுமுறைக் காலத்திற்கு ஊதியமும் கிடைக்கும். உழைப்பாளிகள் ஏராளமான தம் ஓய்வு நாட்களை ஓட்டல்களில் உல்லாசமாகக் கழிப்பர். எதிர்பாராமல் ஒருவன் விபத்திற்கு ஆளாகியோ, நோய்வாய்ப்பட்டோ, ஊனமடைந்தோ போனுல் அவனுக்கு அரசின் உதவி கிடைப்பது உறுதி. சிகிச்சைக்காகக் கட்டணம் எதுவும் கிடையாது. கூட்டுறவு நிறுவனங்களில் கூட அண்மையில் பென்சன் முறை புகுத்தப்பட்டுள்ளது.

ஆடவர்களுக்கும் பெண்டிர்க்கும் ஒரேவித உரிமை கிடைக்கின்றது. பதினெட்டு வயதான ஒவ்வொருவருக்கும் அரசியலில் தடை கிடையாது. மற்ற மேல் நாடுகளில் இருப்பதுபோல் மத உரிமைகளில் சுதந்திரம் அங்கேரி வாசிகளுக்கும் இருக்கின்றது. மடங்களுக்கும் பாதிரிமார்களுக்கும் அரசினரிடமிருந்து மான்யங்கள் கிடைக்கும்.

எட்டாம் வகுப்புவரை ஒவ்வொருவருக்கும் கட்டாயப் படிப்பு விதிக்கப்பட்டுள்ளது. அறிவாற்றல் பெற்ற மாணவர்கள் விரும்பினுல் கல்வியை மேலும் தொடர்ந்து நடத்த வசதிகள் அமையப்பெற்றுள்ளன, குழந்தைகளைப் பேணுவதில் பெரிதும் அக்கறை காட்டப்படுகிறது. உழைப்பாளிகள் மனந் தளர்ச்சியுருமல் உழைக்க உதவும்படி இலக்கியம், சங்கீதம், சினிமா, வானெலி, வானெளி போன்ற பொழுதுபோக்குகளுக்கான ஏற்பாடும் இங்கு உண்டு. அதாவது இவை யாவும் சட்டபடி கிடைக்கும் போக பாக்கியங்கள் என்றுல் முற்றிலும் பொருந்தும் பேச்சே ஆகும். இந்த உரிமைகளுக்காகவல்லவா இந்நாட்டினர் பல்லாண்டுகளாகப் பாடுபட்டு, இரத்தம் வடித்தனர்! புத்தம் புதுத் தொழில் நிலையங்கள், சீர் சிறக்கும் கிராமங்கள், அழகிய நெடுஞ்சாலைகள், இரயில் சகடங்கள் ஆகியவையும் இப்பொழுது மேன்மேலும் வளர்ச்சிப் பாதையைக் கடந்துவருகின்றன. இதற்குமுன்பு பத்துப் பதினைந்து ஆண்டுகளாக இந்த நாட்டைக் கண்டிராதவர்கள் காண நேரிடின், இதைப் புரிந்துகொள்வதே கடினம்.

முன்பெல்லாம் இங்கு ஆயிரக்கணக்கான, ஏன், இலட்சக்கணக்கான பிச்சைக்காரர்களும், சயரோகிகளும் மலிந்துகிடந்தனர். இதே இடம், இன்று செல்வம் கொழிக்கக் காணப்படுகின்றது.

டான்யூப் ஆற்றின் இரு மருங்கிலும் இதன் தலைநகரமாகிய புதாபெசுட் பரவியுள்ளது. இதன் சட்டசபையும் இந்த ஆற்றங்கரையின் மீதே இடம் பெற்றுள்ளது, இவ்விடத்தில் 'ரீர் சதுக்கம்' என்னும் பரந்த திடல் ஒன்று உள்ளது. இதற்கு இணையான வேருெரு திடலை ஐரோப்பாவில் வேறெங்கும் காண்பது அரிதே.

இன்றைய இந்திய ருபாயைப் போன்ற நூறு அம்சங்களாகப் பிரிக்கக்கூடிய அங்கேரி நாணயம் "பாரின்ட்" என்றழைக்கப்படுகிறது. அங்கேரியில் திராட்சை விளையும் பிரதேசம் அதிகம், இந்நாட்டினருக்கு இசையில் நாட்டம் அதிகம் உண்டு. ஓவியக்கலையிலும் இவர்களுக்கு ஆர்வம் அதிகம். அங்கேரிப் பெண்டிர் கயிற்றின் வாயிலாகக் காலணி செய்வதில் வல்லுனர்கள். இவர்கள் உருவாக்கும் செருப்புக்கள் விற்பனையாகும் பெரியதொரு கடைத்தெருவும் அங்கேரியின் பெயர்பெற்ற இடங்களில் ஒன்று. அங்கேரி மொழி சுமார் பத்துஇட்சம் பதங்களைக் கொண்டதொரு இனிய மொழி இந்த நாட்டினர் உடுப்பது உண்பது போன்ற பழக்க வழக்கங்கள் ய... ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கி... யாக இருப்பது மட்டுமின்றி ... மேலும் வளர்ச்சி அடைந்தவ... வளருகிறது.

—திருமதி நிர்ம...

— 6-ம் பக்கத் தொடர்ச்சி

பலியாக்கிக்கொள்ளத் துடித்தா... அவன் அப்பன கற்றுத் தந்த பா... தான் அது. யாரையும் விடாமல் ப... படுத்திக்கொள்வான் தன் செய... களுக்கு. தமிழர்களைக் கண்டபோதெ... லாம் எரிந்து விழுந்த அவன் முக... தன் செயலுக்குக் கருவியாகக் கூ... யோரைக் கண்டபோதெல்லாம் கள்ள... சிரிப்பைக் கொட்டியது. தா... கொண்ட ஆசைக்காக எவரையு... எப்படியும் நாடும் துணிச்சல் அவனு... கிருந்தது. ஆசை வெட்கத்தை ஓட்... விடவே அவன் கண்ட இடங்களு... கெல்லாம் ஓடினுன்! பார்த்தவர்களி... மெல்லாம் பல்லைக் காட்டினுன். ஏற்கனவே இருந்த ஆசை சோமாவதி... அரண்மனையை விட்டு வெளியேறிய... பின் கொழுந்து விட்டெரியத் தொடங்கி... யது. நல்லது கெட்டது அறியும்... சிந்தை, அந்தத் தீயில் கருகி அழிந்... தது. இன்றேல் அவன் தங்கை பலி... யாகியிருக்க வேண்டியதில்லை. குமரன் தாண்டி ஓடியிருக்க வேண்டியதில்லை.

குணதிலகேக்கு வரவேற்புப் படித்துவிட்டு ஓடி வந்த அமரசேனே கோட்டைக்குள் நுழைந்ததும் எங்கும் பரபரப்பு மிகுந்தது. ஆடல் பாடல் காரர்களுக்குச் சொல்லி அனுப்பப்பட்டது. கொட்டகை அலங்காரக்காரர்கள் கூட்டம் கூட்டமாய் வந்தனர். வாத்தியக் கருவிகள் எத்தனை உண்டோ அத்தனையும் ஒலித்தன; முழங்கின. தெருவெல்லாம் தோரணங்கள் கட்டப்பட்டன. காவல் படையினரும் யானைப் படையினரும் ஒற்றுப் படையினரும் பிறரும் நெருங்கி வரும் நாளை எண்ணிப் பயிற்சிகளை மேற்கொண்டனா; அணிவகுத்துப் பார்த்துக்கொண்டனர். அடிக்கடி புத்த பிக்குகள் மறந்து போன வாழ்த்து மொழிகளை நினைவுபடுத்திக்கொண்டனர், வரப் போகின்ற குணதிலகேயை வரவேற்று வாழ்த்த.

ஏற்பாடுகளைக் கண்டு பூரித்துக் கிடந்த அமரசேனே, "இருக்குமிடம் கண்டு பிடித்துவிட்டோம்!" என்று ஒற்றர்கள் சொன்ன அருஞ்சேதியை மனதில் நினைத்து சுவைத்துக்கொண்டான். திடீரெனப் பறந்துவரும் குதிரைகளின் ஒலியைக் கேட்டான். "நாளைக் காலையில் குணதிலகே வந்துவிடுவான்! அதற்கு முன்பே இந்தக் கதையை நான் முடித்துவிட வேண்டும்!" என்று எண்ணியவன், "கொண்டு வருக, அந்த நாயை!" என்றுன்.

குதிரையை விட்டிறங்கி அரண்மனைக்குள் நுழைந்த புரவி மறவர்கள் அவன்முன் கொண்டு வந்து தள்ளினர் மாறநம்பியை!

வெறி வேங்கையின் முன் தமிழ் மறவன்!

"நம்பி! இனி எனக்குப் பகை எவருமில்லை!"

அமரசேனே முழங்கினுன்.

நம்பி மயங்கினுன்.

—தொடரும்—

எத்தனை பாடல்கள்!

இளமை உள்ளங்களில் இன்ப உணர்ச்சியின் அலைகள் அரும்புதல் இயற்கை, அவ்வலைகளை வெளியீடு செய்தல் அரிது அவற்றைத் தெளிவாக உணர்ந்து அழகுறப் பதிவு செய்தற்கு முயற்சி செய்த இலக்கியங்களுள் தனிச் சிறப்புடையது, தமிழிலக்கியம். அரிய ஒன்றும் நந்தமிழ்ப் புலவர்க்கு எளிதாக அமைந்தது என்பதனை அறிகின்றோம். அப்புலவர் பெருமக்கள் மனித வாழ்வின் அடிப்படையான விழுமிய காதலுணர்ச்சியைக் கையாளும் பெற்றி அழகியது அகவாழ்வு பற்றிய நந்தமிழிலக்கியம், இவற்றிற்குப் பெருஞ்சான்றாக அமைதலைக் காணலாம். அறிவோடியைந்த இன்ப அன்பைக் காட்டும் அகச்சுவை ஒளிரும் இலக்கியங்களில், அன்று வாழ்ந்த தமிழர் கொண்ட நாள் தொடக்கம் பற்றி ஆய்தற்குக் குறிப்புக்கள் பெருகிய அளவில் உண்டு. அவர்கள் குறித்துச் சென்ற நடுநாளின் வழியாக, நாள் தொடக்கம் இஃது என்னும் எண்ணம் என் நெஞ்சில் கருக்கொண்டது. அவ்வெண்ணத்தின் வெளிப்பாடு இக்கட்டுரை.

தலைமகள், தலைமகன் பொருள் வயிற் பிரிகின்றான் என்பதனை உணரத் தலைப்படுகின்றாள்; அவ்வளவில் துயரத்திடை ஆழ்ந்து நிற்கின்றாள்; அத்துயர் தணியவில்லை; பெரிதும் மனம் நொந்தாள். அவள் துயரக் குறிப்பினைத் தலைவன் தெளிகின்றான். அவன் மனத்துள், ‘இத்தன்மையாளைப் பிரிவேன் என்னும் எண்ணம் என் நெஞ்சில் எழுதல் பெருங் கொடுமையது’ என்று தோன்றுகின்றது; ஆதலால் அவன் பிரிவை விலக்கத் துணிகின்றான். இது நற்றிணை நல்கிய செய்தி.

அது தொடர்ந்து மழை பொழியும் நடுயாமம். மழைத்துளியொடு குளிர் வழங்கு வாடைக்காற்றும் வீசுகின்றது. ஊர்முழுதும் உறக்கத்தினை மேற்கொள்கின்றது. தலைவி, அந்த நடுயாமத்திடை நடுங்குகின்ற காமநோய் துயருறுத்தலால் நல்லெழில் குன்றித் தோன்றுகின்றாள். இங்குப் பெருந்தலைச் சாத்தனாரின் ‘யாமம்’ பற்றிய கருதத்தகும் ஒன்றாகும்.

“உறைமயக் குற்ற
ஊர்துஞ்சு யாமத்து”
(நற்றிணை : 262)

என்பது அப்புலவர் பெருந்தகை தரும் குறிப்பு. இவ்விடத்து ‘யாமம்’ என்னுஞ்சொல் இரவின் நடுப் பொழுதை (Midnight) உணர்த்தி நிற்கின்றது.

அடுத்து, அள்ளூர் நன்முல்லையார் காட்டும் ‘யாம’த்தைக் காணலாம். காதலன் ஒருவன் தன் காதலியைப் பிரியின் உயிர்வாழ்தல் அருமையெனக் கூறத் தலைப்பட்ட புலவர், காமத்தின் பெற்றியினையும் அறிவிக்கின்றார். அதனையும் அறிவோம் :

“ காலையும் பகலுங்
கையறு மாலையும்
ஊர்துஞ் சியாமமும்
விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற்
பொய்யே காமம்”
(குறுந்தொகை—32)

என்பது அப்புலவரின் காதல் நடைதிகழ் குறுந்தொகைப் பாடல்.

காலையும், பகலும், மாலையும், ஊரினர் துயில்கொள்ளும் இடையிரவும், விடியற் பொழுதும் என்ற இவ்வைம் பொழுதுகளின் செவ்வி இடையே தோன்றிடின், அவரின் காமம் பொய் என்பது புலவர் கருத்து. இங்கு நன்முல்லையார் பெய்துள்ள ‘ஊர் துஞ்சி யாமமும்’’ என்ற தொடருக்கும், நற்றிணைப் பாடற்கண் வரும் “ஊர்துஞ்சு யாமத்து” என்ற தொடருக்கும் எத்துணைப் பொருள் பொருத்தம் என்பதனை அறியலாம்.

மேற் சென்று தொல்காப்பியர் ‘யாமம்’ என்னுங் கிளவியினை எப்பொருளில் ஆண்டுள்ளார் எனக் காண்போம் :

“குறிஞ்சி, கூதிர் யாமமென்மனார் புலவர்” என்பது தொல்காப்பிய நூற்பா. இந்நூற்பா (அகத்திணையியல்: 7) உரைப்பகுதியில் இளம்பூரணர், “யாமமாவது இராப்பொழுதின் நடுக்கூறு” எனக் குறிக்கக் காண்கின்றோம். இதனின்று, யாமம் என்னுஞ் சொல்லினை, ‘பானாள்’ போன்ற சொற்கள் புலப்படுத்தும் பொருளொடு ஒப்பிட்டு ஒரு முடிவுக்கு வர இயலும். மேல், நற்றிணைப் பாடலும், குறுந்தொகைப் பாடலும் ‘யாமம்’ என்னுஞ் சொல்லிற் றத்தந்த பொருள் தெளிவுபடுத்தலை அறிதல் கூடும்.

மேலும், இது குறித்து நுணுகி நோக்குதல் சிறப்பு.

“ பானாட் கங்குலும்
பெரும்புன் மாலையும்
ஆனா நோயொடு
அடிபடர்க் கலங்கி
நம்வயின் நினையும்
இடும்பை கைம்மிக”
—(அகம் : 297)

என்பது மதுரை மருதனிள நாகனாரின் பாடல். இப்புலவர் பொருள் தேடுதற்கெனப் பிரிய நிற்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறுதலைத் தெளியச் செய்கின்றார்.

நடுங்கு துயருறுத்தும் காடு. அக்காட்டிலும், தலைவியின் நெஞ்சம் உடன்போக்குத் துணியலாயிற்று. அத்துணிவை வெளியிட்ட போழ்து அவளின் நோக்கம் உவகைப் பெருக்கால் சிறந்து விளங்கிற்று. அம்மகிழ்ச்சியின் மலர்ச்சி தலைவன் உள்ளத்தில் உறைகின்றது. அந்நிலையில் அவன் நெஞ்சிற்குச் சொல்லும் பகுதி வேண்டிய ஒன்று. “பாதி நாளாகிய இரவிலும், மிக்க பொலிவற்ற மாலைக்காலத்தும், அமையாத வருத்தத்துடன் அவள் மிக்க துயரத்தாற் கலங்குகின்றாள் அவள் நம்மை நினைதலால் பொங்கும் துன்பம் அளவுகடத்தலான், நம்மிடத்து என்ன தீங்கு நிகழ்ந்திடுமோ?” என்னும் இக்கூற்றில், தலைவன் மனத்தில் தழைத்து நிற்கும் எண்ணங்களைப் புலப்படுத்தும் புலவர் ‘பானாள்’ என்னுஞ் சொல்லின் பொருளையும் தெளிவுறுத்துகிறார். இதனின்று ‘பானாள்’ என்பது ‘பாதி

எத்தனை பொழுதுகள்!

நாளாகிய இரவு’ (Midnight) என்னும் பொருள்படல் காணலாம்.

இப் பானாளின் பொருளுக்கரண் செய்யும் ‘அரைநாள்’ வழங்கும் பொருளும் கருதற்குரியது அகநானூற்றிலே, இரவுக் குறிக்கண் தலைமகனுக்குத் தலைமகள் மொழிந்ததாக மதுரைப் பண்டவாணிகன் குளந்தேவனாரின் பாடலொன்றில் அரைநாள் பற்றி எடுத்துரைத்துள்ளதைக் காணலாம்.

மென்மை விளங்கும் ‘இருள்நாறி’ முதலான அரும்புகள் அலர்ந்த நடுநாள் அது. அவ்விருள் செறிந்த இரவில் தலைவன் வருகின்றான் இதன் சிறப்பினை,

“மென்பிணி யவிழ்ந்த
அரைநாள் இரவு”

எனவரும் அகப்பாடல் அடியால் புலமைச் செல்வர் குறித்துப் போற்றியுள்ளார். அப்புலவர் ‘அரைநாள்’ என்னுந் தொடருக்குக் காட்டும் பொருளையும், யாமம், பானாள் ஆகிய இவ்விரண்டும் உணர்த்தும் பொருளையும் தொடர்புபடுத்திக் காணின் பிழையாகாது.

இம்முச்சொல்லையும் ஒருங்கு வைத்துக் காணின், அவை ஒரு பொருள் புலப்படுத்தலை இனிது தெளியலாம்.

இனி, மற்றொரு பாடலைத் துணை கொண்டு ‘நடுநாள்’ என்பதன் பொருளை அறியலாம்;

“நடுநாள் வருதலும் வரூஉம்”
—(குறுந்தொகை: 88)

என்னுங் குறுந்தொகை நடையைப் புலவர் மதுரைக் கதக்கண்ணனார் கூறினார்; அக்கூற்றில் ‘நடுநாள்’ என்னுஞ் சொல்லின் வழக்கினை நமக்குக் காட்டினார்.

“தலைவன் இரவுக்குறியை விழைகின்றான்; இனி இடையிரவில் வருதலையும் செய்வான்” எனத் தோழி தலைவிக்கு நவின்றாள். இஃது அப்பாடலின் கருத்து. அப்பாடலின் ஓர் அடியில் வரும் ‘நடுநாள்’ கிளக்கும் பொருளை, மேற்குறித்த முச்சொல் காட்டும் பொருளொடு வைத்து எண்ணத்தக்கது.

இதுகாறும் சொல்லியவற்றால், யாமம், பானாள், அரைநாள், நடுநாள் ஆகிய எல்லாம் ஒரு பொருள் தந்து நிற்றல் வெளிப்படை. நடுநாள் என்பது இரவின் நடுப்பொழுதைச் சுட்டுதலால், தமிழர் நண்பகலை (Midday) நாளின் தொடக்கப் பொழுதாகக் கொண்டனரெனத் தோன்றுதல் இயற்கை இதனை ஓரிரு சான்றுகொண்டு துணிதற்கியலும். எனினும் ஆழ்ந்து காணாத முடிவு சிறப்புறுதலில்லை என உணர்ந்தேன். எனவே யாமம், பானாள், அரைநாள், நடுநாள் ஆகிய நான்கு சொற்களுக்கு, இரவின் நடுப்பொழுதெனும் பொருளைப், பாடலின் சூழ்நிலையில் வைத்தும், தொல்காப்பியரின் துணைகொண்டும் வெளிப்படுத்தினேன். நடுநாளை வைத்துக் காணுங்கால், அதன் வழியாகத் தமிழரின் நாள் தொடக்கம் நண்பகலாக இருத்தற்கியலும் என்பது என் எண்ணம். அடுத்து ஒருபடி மேற்சென்று காணத் தலைப்பட்டால் நாள் தொடக்கம், நண்பகல் பன்னிரண்டு மணியளவினதென்னும் தெளிவு பிறத்தல் உறுதி. ஏனெனின், யாமமென்பது இரவு பத்து மணிக்கும், இரண்டு மணிக்கு இடைப்பட்ட காலத்தைக் குறிக்கும். அங்ஙனமே நண்பகலும் பத்து மணியிலிருந்து இரண்டு மணிவரையும் உள்ள காலத்தைக் குறிக்கும். இவற்றினின்று, நண்பகல் பன்னிரண்டு மணியே தமிழர் நாள்தொடக்கமெனின் இழுக்கில்லை.

—இரெ. குழந்தைவேலு.

பாபுராவின் பதில்கள்

கேள்வி : சைனாவின் விரைவான முன்னேற்றத்திற்குக் காரணம் என்ன?

பாபுராவ் பதில் : செய்தித்தாள்களை முழுமையாக அடக்கி ஆண்டதுதான்.

கேள்வி : நேருவின் அரசாங்கத்தில் எங்கேனும் ஊழல் இருக்கிறதா?

பா. ப : அந்த அரசாங்கத்தில் தனக்கும் கொஞ்சம் இடம் தரும்படி யோக்கியத்தன்மை கெஞ்சுவதும் தென்படுகிறது.

ஏருழவர் நெஞ்சன்றோ கொதிக்க வேண்டும்?

●

தங்கநிற நெற்கதிர்கள் வளைந்து நிற்கும்
　　தடவயலின் வரப்போரம் நடந்து சென்றேன்.
எங்கெங்கும் எழில்வாரி வீசு கின்ற
　　இளங்கதிரோன் மெதுவாக மேலே வந்தான்.
பொங்குகின்ற மகிழ்ச்சியினால் உழவ னுள்ளம்
　　புதுப்புனலாய்ப் பெருகியது பயிரைக் கண்டே.
அங்கமெலாம் பூரிக்க நின்றி ருந்தான்;
　　அவன்முகத்தைப் பார்த்தபடி அருகில் சென்றேன்.

"நெருங்குகிற தேர்வென்னும் போரைக் கேட்டு
　　நெஞ்சத்தில் கவலைகொளும் மாணவன் போல்
திருமுகத்தில் நேற்றுவரை கவலை தேக்கி
　　தெளிவற்ற நெஞ்சினனாய் வாழ்ந்தாய்! இன்றோ
இருளகற்றும் ஒளிக்கதிராய்த் துலங்கு கின்றாய்!
　　இதற்கென்ன காரணமோ? உரைப்பாய்!" என்று
பெருகிவரும் தமிழ்மொழியில் சொற்கள் கூட்டிப்
　　பெருமகிழ்வால் யான்கேட்டேன். அவனும் சொன்னான்.

"நேற்றுவரை கவலையுடன் வாழ்ந்தி ருந்தேன்;
　　நீரற்ற தாமரையாய் வாடி நின்றேன்;
நாற்றுநட்ட பயிரின்று கதிரைத் தாங்கி
　　நடமாடும் எழில்கண்டேன்; மகிழ்ச்சி கொண்டேன்!
சோற்றுக்கு வழியின்றி இன்னல் பட்டுத்
　　துடிக்கின்ற என்வீட்டார் பஞ்ச மெல்லாம்
காற்றாகப் பறந்துவிடும் எனநி னைந்து
　　களிப்பென்னும் பெருங்கடலில் நீந்து கின்றேன்!"

உழவன்றன் விழிகளிலே நம்பிக் கையின்
　　ஒளியுருவம் நடமாடக் கண்டேன்; பின்னர்
வழிநடந்தேன் விடைபெற்று. கதிர்க ளெல்லாம்
　　வாவாவென் றெனையழைக்கத் தலைய சைக்கும்
அழியாத கவிதைக்கும் கருவாய் நின்ற
　　அன்னைத்தமிழ் நாட்டுழவன் தன்னை யெண்ணி
பொழில்தாண்டி மணல்தாண்டி வீட்டை நோக்கிப்
　　புத்துணர்ச்சி பெற்றவனாய் நடந்து சென்றேன்.

ஒருவாரம் ஓடிற்று; மீண்டும் ஓர்நாள்
　　ஒளிமங்கும் நேரத்தில் வயலோ ரத்து
வரப்பின்மேல் நடைபோட்டேன். அங்கோர் பக்கம்
　　வாடிப்போய் அமர்ந்திருந்தான் உழவன்; ஒன்றும்
புரியாமல் அவனருகே நெருங்கிச் சென்று
　　"புவிவாழ்வில் சூழ்ந்திட்ட துன்பக் கேட்டை
மறுக்காமல் மறைக்காமல் உரைப்பாய்!" என்றேன்.
　　மனம்நொந்து அவனும்தன் வாய்தி றந்தான்.

"கதிர்மணிகள் என்வீடு வந்து சேரும்;
　　கவலையெலாம் புகைபோல மறைந்து போகும்;
அதிர்வளையாள் களித்திடுவாள்; வீட்டில் மக்கள்
　　ஆனந்தப் பண்பாடித் திரிவ ரென்றே
இதயத்தில் நானெண்ணி மகிழ்ந்தி ருந்தேன்.
　　என்சொல்வேன்? என்னெண்ணக் கோட்டை யெல்லாம்
மதியற்ற வானாக இருண்டு போச்சு;
　　மனம்நொந்து வாடுகிறேன் மாநி லத்தில்!

துன்பத்தைப் பாராமல் காக்கைக் கூட்டம்
　　தொடுத்திட்ட சிறுகூட்டில் குயில்நு ழைந்தே
இன்பத்தை நுகர்தல்போல் பணக்கா ரர்கள்
　　ஏழைகளின் உழைப்பாலே வாழு கின்றார்
என்னுழைப்பின் பயனையான் நுகர்ந்தே னில்லை
　　என்செய்வேன்? முதலாளி விளைவை யெல்லாம்
தன்வீட்டிற் கெடுத்துப்போய்க் குவித்துக் கொண்டான்
　　சாகாமல் சாகின்றேன் நடைப்பி ணம்போல்"

துன்பத்தின் தொடர்கவிதை உழவன் சொல்லி
　　சுரந்திட்டான் விழிகளிலே வெந்நீர் ஊற்று
தென்னாட்டு மக்கள்தம் நிலையை யெண்ணிச்
　　சிந்தித்தேன் நீர்முத்து; நிலச்சு வான்தார்
புன்மைமிகு செயலெண்ணி, உழைப்பே இன்றி
　　பொற்குவையைப் பெறுகின்ற நிலையை யெண்ணி
என்னெஞ்சம் தணலாகக் கொதித்த துள்ளே!
　　ஏருழவர் நெஞ்சன்றோ கொதிக்க வேண்டும்?

—துறையூர் ந. அலி.

சதாசிவம் – சரோசா



ஓவியர் சதாசிவம் 9-3-60 அன்று காலை தோழியர் சரோசா அவர்களை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்கள். ஆசிரியர் கண்ணதாசன் அவர்கள் தலைமை ஏற்று சென்னையில் நடத்திவைத்த இத்திருமணத்தில் மண மக்களுக்கு, நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி, மேயர் அப்துல் காதர், முன்னாள் ஆணையாளர் பி. பாலசுந்தரம், அரங்கண்ணல், மலர்மகள் முதலியோர் வாழ்த்துரைத்தனர்.

தென்றலும் வாழ்த்துகிறது. வாழ்க! வாழ்க!

என் தாய்

(12)

கோழி முட்டை யிட்டது; அடைகாத்தது; குஞ்சு பொரித்தது.
குஞ்சு சில நாட்கள்கூட இருந்தது வளர்ந்தது; குப்பை கிளறக் கற்றுக்கொண்டது.
வளர்ந்த குஞ்சு சேவலாயிற்று; வளர்த்த கோழி அதை விரட்டி யடித்தது.
இப்போது இரண்டிற்கும் ஒட்டில்லை; உறவில் பகை; தீராப் பகை.

நாய் குட்டி போட்டது; பாலூட்டியது; குட்டியும் சிலநாட்கள் கூடவேயிருந்தது.
குட்டி வளர்ந்ததும் வேறெங்கோ போயிற்று; வளர்த்த நாயும் அதைத் தேடவில்லை.
பெற்றபாசம் அதற்குக் காணேம்; "புத்திர சோகம்" அதைத் தாக்கவில்லை.

பெண் ஒருத்தி மனைவியானள்; மனைவி கருவுற்றுள்; தாயுமானுள்.
இன்று அவள் கணவனுக்கு மனைவி; கணவனைப் பெற்றவர்க்கு மருமகள்.
தான் பெற்ற மழலைக்குத் தாய்; தன்னை யீன்ற பெற்ரேர்க்கும் மகள்.
புகுந்த வீட்டிற்கு வந்தும் பிறந்த வீட்டின் பற்று நீங்கவில்லை; நீங்காது.
இது மனிதகுலத்தின் தனித்தன்மை; இயற்கையின் கட்டளை.
அந்தத் தாய் தன் மக்களுக்காக வாழ்கிருள்.
மகன் மனைவிக்காகக் காத்திருக்கிருன்; மகள் கணவனுக்காக வளர்கிருள்.
என்ன விந்தை இது ? மனித வளர்ச்சியின் இரகசியமே இதுதானே ?
தாய் வாழ வைக்கும் தெய்வமாம்; வழிபாட்டுக்குரிய தெய்வமாம்.
அந்தத் "தாய்" அன்றும் இருந்தாள்; இன்றும் இருக்கிருள்; என்றும் இருப்பாள்.
யார் இறந்தாலும் "அம்மா' இறக்கமாட்டாள்.
இதோ ஒரு தாய்; உழைத்து உழைத்து ஓடாகிக்கொண்டிருக்கும் தாய்.
"தாழ்ந்த வகுப்பினர்; தள்ளி வைக்கப்பட்ட தனிக் கூட்டத்தார்.
பரம்பரை பரம்பரையாய்ப் படித்தறியாப் பாமரப் பிரிவினர்.
கற்கால வாசிகளின் "ஸ்பெசிமென் காபி"; காலம் மாறியும் கடுகளவும் மாருதவர்.
இப்படி ஏசினர் பலர்; ஏய்த்தனர் சிலர்; தூற்றினர் பலர்; தொல்லை; தொலையாத தொல்லை.
தாய் மனம் தவித்தது; தக்கது செய்யத் துணிந்தது; கடைக்குட்டி மகனைக் கட்டித் தழுவியது.
பிள்ளையைப் பள்ளிக்கனுப்பினுள்; பையன் படித்தான்; படித்தான்; பத்தாவது வரை படித்தான்.
அப்பப்பா! அவனும் அவனையீன்ற தாயும் அதற்குள் ஏற்ற இடுக்கண்கள் பல.
"பையன் படிக்கிருனு ? பாராளப் போகிருனு ? பைத்தியமே, உனக்கேன் பேராசை ?'
—இப்படிப் பேசினர் பலர்; தடுத்தனர் சிலர்; எதையுந் தாங்கும் இதயம் பெற்றுள் தாய்.
பையனைக் கூட்டிக்கொண்டாள்; பிரிதோர் ஊர் சென்றுள்; பையன் படித்தான்.
வயதான தாய் வீட்டுவேலை செய்தாள்; வேதனையில் மூழ்கினுள்; சோதனையில் தத்தளித்தாள்.
அரைவயிறு, கால்வயிறு உண்டாள்; அன்புடை மகனுக்குப் பண்புசால் கல்வி தந்தாள்.
படித்தறியாக் கூட்டத்திலே படித்தவன் தன்மகன் ஒருவனே !-பூரித்தாள் தாய்.
எடுத்த காரியத்தை முடித்தாள்; இதயபாரத்தை இறக்கிவைத்தாள்; ஆனுல்...
தந்தையும் தமயனும் பெண் பார்த்தனர்; தாய் தடுத்தாள்; பயனில்லை.
மருமகள் வீட்டுக்கு வந்தாள்; மகனுக்குத் தகுந்தவள் அல்லவென வெகுண்டாள் தாய்.
அன்றுமுதல் இன்றுவரை அதேநிலை; மருமகளுக்கும் மாமியார்க்கும் பிணக்கு.
மருமகளும் நல்லவளே; ஆனுலும், மன நிறைவில்லையே; பிளந்தது குடும்பம்.
உடன் வந்துவிடுமாறு வேண்டினுன் மகன்; உடன்பட மறுத்தாள் தாய்.
" 'சீ' என்பாள்; 'சா'வென்பாள்; சோறிடுவாள்; வேண்டாமடா அவ்வாழ்வு !"
—இப்படி மறுத்தாள் தாய்; மனங் கலங்கினுன் மகன்; வேறு வழியில்லை.
தாயைப் பிரிந்தாள்; தனிக் குடித்தனம் சென்றுன்; தந்தையும் தமயனும் மாண்டனர்.
தாய் மனம் மாறவில்லை; தனியாகவே உழைக்கிருள்; தனியாகவே உண்கிருள்.
மகன் அன்னைக்குச் சோறிடும் பேறு பெறவில்லை; அவன் மனம் கல்லுமல்ல.
பெற்ற மனம் பித்து; இன்னும் அது பிள்ளையை மறக்கவில்லை; பரிவுக்கும் எல்லையில்லை.
மகன் ஓர் என். ஜி.ஓ. ; அவனுக்கோரு மகன் ; அன்பெனும் பேருடையவன்.
மகன் இன்னும் தாயின் உழைப்பைத் தின்கிருன்; தள்ளாத வயதிலும் தாய்மை உதவுகிறது.
"தொண்டு" "தொண்டு" என்கிருர்களே, இந்தத் தாய்மையின் தொண்டுக்கு நிகருண்டா ?
அந்தத் தாயின் தனயனும் நான் என்ன கைம்மாறு செய்வேன், "அவளே என் தாய்" என்பது தவிர ?

—"பூவையான்".

(13)

ஒரு நாள் எனக்கு ஒளி கிடைத்தது !
உலகினிலே குழந்தையாய்ப் பிறந்தேன்.
வயிற்றிலே என்னவோ செய்வதுபோல் உணர்வேன்
வாய்மூலம் குரல்கொடுப்பேன்; அழுகையென்போம் இன்றதை !
வாரி அணைக்கும் இருகைகள்.
வயிற்றுத் தொல்லைக்கு வாய்மூலம் ஆறுதல் கிடைக்கும்.
தினமும் இவ்வாறுதல் கிடைத்தது. ஆனுல்...
நிலையான இடமில்லை, நகர்ந்துகொண்டே இருந்தோம்.
எங்கெங்கோ எடுத்துச் செல்லப்பட்டேன்.
யார் யாரோ எங்களைப் பார்த்தனர்
பரிதாபத்துடன் சிலர்; அலட்சியத்துடன் பலர் !
பார்த்தவரில் சிலர் இருந்ததைத் தந்தனர்,
பார்த்தவரில் பலர் என்னென்னமோ சொன்னுர்கள் !
எனக்குப் புரியவில்லை; புரியாத வயது !

"அம்மா",...ஆமாம், நான்பழகிய முதல்உயிரிடம் நான் பேசிய முதல் வார்த்தை
"அம்மா! அம்மா!" என்று சொன்னுல் அந்த முதலில் அறிமுகமான உயிர்—அவள்தான் என் அம்மா—என்னை எடுப்பாள்; அணைப்பாள்...முத்தங்கள் தருவாள், கணக்கின்றி !

வளர்ந்தேன்;
எங்களுக்குரிய பட்டப்பெயர்களையும் தெரிந்தேன் !
அம்மாவைப் பிச்சைக்காரி என்றுர்கள் !
அருகிருந்த என்னைப் பிச்சைக்காரப் பையனென்றுர்கள் !

கிடைத்ததை முதலில் என்னிடம் தருவாள்.
உனக்கென்னபன்; பசியில்லை என்பாள !
சிலருக்குத்தான் பசிவரும் எனநான் அன்று நினைத்தேன்.
மீதிஇருந்தால் தான்அவள் உண்பாள்.
இரவினில் எங்காவது படுப்போம்.
என்னைத்தன் கையாலணைத்து உறங்குவாள்.
குளிர்நாளில் தனக்கிருக்கும் குறையுடையில்
தளிரெனவே என்னுடலை மூடிவைப்பாள்.

எழுதக் கற்றுக் கொடுத்தாள் எனக்கு.
இணையில்லை இவ்வெழுத்தைக் கொண்ட, மொழிக்கு
இவ்வுலகில் வேறுமொழிஎன்பாள் ! எனக்கென்ன தெரியும் !
பாடக் கற்றுக் கொடுத்தாள், தொழிலுக்காக !

ஒருநாள் பகலில் இருவரும் படுத்தோம்.
உறக்கம் வரவில்லை எனக்கு.
எழுந்து சற்றுத் தள்ளி அமர்ந்திருந்தேன்.
உறக்கத்திலே அன்னை கைகளால் தடவினுள். நானில்லை.
உடனே "முத்து" எனவலறி எழுந்தாள்.
அம்மா எனும் குரல் கேட்டென்னைப் பார்த்தாள்
அப்போதவள் முகத்தில் அரும்பியது மகிழ்ச்சி;
அம்மகிழ்வை வேறுஎங்கும் நான்கண்டதேஇல்லை.

"நம்மைப்போல் பலர்ஏன் ?" என்றேன் ஒருநாள்.
நல்லதமிழ் நாட்டினிலே உணர்ச்சி இல்லா
மரக்கட்டைகள் மனிதர்களாய்ப் பிறந்ததால்,
மறத்தமிழர் அடிமைத் தமிழர் ஆனதால்!" என்றுள்

கண்ணென்று எனைச்சொன்னுள். காத்துவந்தாள்.
கண்களை மூடி விட்டாள் ஒரு நாள்...
அவள் உருவம்...
அவளுடைய அன்புருவை நினைவூட்டப் படமெதற்கு?
படமெடுக்க அன்று பணமுமில்லை, இன்றுபோல்.
வேறு கருவிகளால் படமெடுத்திருந்தாலும்
வீதிசுற்றும் பிச்சைக்காரியையே காட்டியிருக்கும்.
கந்தலாடையையும் பரட்டைத் தலையையுமே காட்டியிருக்கும்.
அவளுடைய அன்புருவை என்னுடைய உள்ளந்தான்
அப்படியே காட்டமுடியும்; அம்மாவாகக் காட்ட முடியும் !

—அ. மாரிமுத்து.

ஐயம் அகற்று

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்.

சி. டக்லஸ் சென்னை-12.

தமிழில் மொத்தம் எழுத்துக்கள் 246-ஃசேர்த்து 247. இதில் தேவையான எழுத்துக்கள் 30 மட்டும் வைத்துக்கொண்டு, இதிலும் நான்கு எழுத்துக்கள் எடுத்துவிட்டு. ஆங்கிலயர்போல் நாமும் குறைவாக 26 எழுத்துக்கள் வைத்துக் கொண்டால் என்ன ?

'ஆங்கிலேயர்போல் நாமும் குறைவாக 26' என்ற தம் வாசகத்தில் பழைய மூட நம்பிக்கைகளைவிட எவ்வகையிலும் வேறுபாடற்ற தங்கள் புதிய ஆங்கில நாகரிக மூட நம்பிக்கை வேரோடியுள்ளது என்பதைத் தாங்கள் கவனிக்கவில்லை. அச்சுருக்களைப் பொறுத்தவரை பெரிய எழுத்து, சின்ன எழுத்தாக 52, கையெழுத்தைச் சேர்த்தால் 104 எழுத்துக்களைப் பள்ளிப் பிள்ளைகள் படிக்க வேண்டியுள்ளது. ஆங்கில எழுத்துக்கும் ஒலிப்புக்கும் எத்தகைய அறிவுத் தொடர்போ, பண்புத் தொடர்போ இல்லாததால், ஒவ்வொரு சொல்லையும் ஒரு கருத்துச் சுட்டும் பட எழுத்தாக ஆங்கில மொழியில் படிக்க வேண்டியிருக்கிறது. இன்று வழக்கிலிருக்கும் ஆங்கில எழுத்து முறை பண்டைச் சீனக் கருத்து பட எழுத்துமுறை (Ideograph)க்கு அடுத்தபடியான உலகின் தலைசிறந்த காட்டுமிராண்டி எழுத்து முறை ஆகும். தங்கள் போன்றவரின் ஆட்சிமொழி மோகம் ஆளும் காகத்தைக் குயிலாகவும், ஆளப்படும் குயிலைக் காகமாகவும் எண்ணச் செய்கிறது.

நிற்க, தமிழில் 246 எழுத்துக்கள் அல்லது 247 எழுத்துக்கள் என்பதோ-இடைக் கால இலக்கணச் கூத்தாடியான நன்னூல் இயற்றிய பவணந்தியார் கருத்துப்படி எழுத்துக்கள் 369 (ஒன்றெழி முந்நூற்றெழுபான்) என்பதோ-உண்மையானதல்ல. தொல்காப்பியப்படி தமிழ் எழுத்துக்கள் 30 (உயிர் 12, மெய் 18) மட்டுமே. வரி வடிவக் குறியீடுகளாகத் தொல்காப்பியர் கருதிய ஆய்தம், இகர உகரக் குறுக்கங்களைச் சேர்த்தால் கூட எழுத்துக்கள் 33 மட்டுமே.

உயிர் மெய் எழுத்துக்கள் கூட்டெழுத்துக்களே யாகும். பிரித்தெழுதும் முறை தொல்காப்பியர் காலத்தில் இருந்திருக்கலாம் என்று கூடச் சில அறிஞர் கருதுகின்றனர். உரையாசிரியர்கள் பழய வழக்காக 'மேலும் கீழும் முன்னும் பின்னும் விலங்கும புள்ளியும் இட்டத்தைச் சுட்டி, பிற்காலத்து அவை திரிந்தன என்று கூறுகின்றனர். உயிரெழுத்தில் ஒன்றையும் மெய்யெழுத்து 18 ஐயும் அடிப்படை வரி வடிவாக வைத்து இங்ஙனம் விலங்கும் புள்ளியும் இரண்டுடனும் சேர்த்து உயிர் மெய்யும் உயிரும் வகுத்துக்கொள்வதானால், முழுக்க முழுக்கத் தமிழ் எழுத்து வரி வடிவுகள் 31-க்குள் அடங்கிவிடும். தொல்காப்பியர் கூறிய சார்பெழுத்துக்கள் 3 ஐயும், மகரக் குறுக்கத்தையும் சேர்த்து 35 ஆக்கிக்கொண்டால் அதற்குள் தமிழ் ஒலிகளை மட்டுமல்ல, உலக மொழிகளின் ஒலிகள் யாவற்றையுமே (அறிஞர் பா. வே. மாணிக்க நாயகர் சுட்டிக் காட்டியுள்ளபடி) வரைந்து காட்டமுடியும். அதுமட்டுமன்று. அவ்வெழுத்து முறை இன்றைய உலகின் மற்றெந்த மொழி எழுத்து முறையையும்விட மொழியியல் ஆராய்ச்சிக்கு உகந்ததாகவும் இருக்கும். ஏனெனில் உலகின் முதல் மொழியியல் ஆராய்ச்சியாளராகவும், இன்று வரை முதன்மை மொழியியலாராகவும் விளங்கியுள்ள தொல்காப்பிய ஆசிரியரே வகுத்த முறை ஆகும் இது. ★

செழியன் உலா

தமிழ்நாட்டிலேயே ஓர் அற்புதத் தியாகி இருக்கிறார்.

தமிழகத்திற்காக அவர் செய்த தியாகங்கள், ஒன்றல்ல; இரண்டல்ல சிறை சென்றார்; சிப்பி ஏந்தினார்! நந்திபோல் பருத்திருந்த அவர் இப்போது இப்படி இளைத்து அலைவதே சிறைக்குச் சென்றதால்தான். அந்தத் தலைவர் இப்போது கலையுலகையும் தியாகம் செய்துவிட்டார். ஐயோ! கலையுலகம் அழுகிறது, அந்தத் தியாகி தன்னிடம் புகுந்து வசனம் எழுதவில்லையே என.

சிவஞானம் சினிமா வசனம் எழுதத் தெரியாதவர் என்று நினைத்துவிடாதீர்கள்! அவரது திறமையைக் காட்டக் கீழே ஒரு சில வசனத்துளிகளைத் தருகிறேன். அவை அனைத்தும் அவரால் பல படங்களுக்கென எழுதப்பட்டவை. ஆனால், சினிமா ஆசையைத் தியாகம் செய்துவிட்டதால் அத்தனையையும் அவர் திரும்ப வாங்கிக்கொண்டார். இனிப் படியுங்கள்:

காதலி காதலனிடம் பேசுகிறாள்:

'ஆ! அன்பரே! வேங்கடமும் விந்தியமும் என விம்மி நிற்கும் தங்கள் தோள்களின் அழகைச் சொல்வேனா? தொங்கும் விரால் மீனையும் தோற்கடிக்கும் தங்கள் மீசையைச் சொல்வேனா? கழுகைத் தோற்கடிக்கும் தங்கள் சிவந்த விழிகளைத்தான் சொல்வேனா? எதைச் சொல்வேன் தங்கள் உறுப்புக்களில், இதுதான் அழகென."

மறவன் போருக்குப் புறப்படும் காட்சியின் வசனம்:

"ஆ! வேங்கடத்தில் ஆந்திரனின் காலா? அதை முறிக்காவிட்டால் என் கையிருப்பது, வீர வாளா? தோழர்களே! கூவம்போல், அனுப்பானடிபோல், இரத்தம் பெருக்கெடுத்தாலும் சரி; விடாது போராடுவோம்! இதுவரைக்கும் தி. மு. க. கூட்டங்களில் கல்லெறிந்துகொண்டிருந்த நம் கைகளுக்கு, இப்போது புதிய வேலை! சுயாட்சி தர மறுப்பவர்கள் மண்டைகளைச் சூறையாடுவோம். சுண்டைக்காய் அளவு கல்லைத் தூக்கி வெண்டைக்காய்க் குழம்பில் போடுவோம்! பண்டிதரைப் பார்த்து "கொடு வேங்கடத்தை" என்று வாலை ஏந்துவோம்! பயமுறுத்தினால் அவர் தாளை ஏந்துவோம்! எலியைக் கண்டு கிலியடையாதவர்கள் நாம். பூனைகளைக் கண்டு புறம் ஓடாதவர்கள் நாம். தவளைகளைக் கண்டு தாவிக்குதிக்காதவர்கள் நாம். கேவலம்! இந்தக் காமராசருக்கா அஞ்சுவோம்! மாட்டோம்! மாட்டோம்! எல்லைப்புற வீரர்களே! உங்கள் வாடகை வாள்கள் கொக்கரிக்கட்டும்! சிலம்புச் செல்வங்களே! உங்கள் கூலிக்கொடிகள் உயரட்டும்!"

(போர் வீரர்களும் இதை ஆமோதித்துக் கத்துகின்றனர்.)

இனி சோக டைலாக். "காக்காவிலே தோல்வியுற்றான் தலைவன் ஒருவன்" என்ற படத்திற்காக எழுதியது:

"தலைவிரித்தாடும் வஞ்ச மலைப் பாம்பே! தமிழ்நாடு காங்கிரசே! உன்னையே நம்பிக்கெட்ட என்னையா தூக்கி எறிந்துவிட்டாய் மூலையில்? நீ எறிந்ததை, எதுவென்றுகூடப் பாராமல் எடுத்து விழுங்கினேனே! நீ காட்டிய ஆளின் மீதெல்லாம் பாய்ந்து விழுந்தேனே, பல்லுடைந்த போதும். என்னையா நீ தூக்கி எறிவது? ஏற்குமா வேங்கடம்? ஐயகோ. ஐயகோ! இலையைத் தொட்டி ஏற்க மறுத்தால் நரியைக் காடு மறந்தால், கூலியை எசமானன் மறந்தால் எப்படி வாழமுடியும்? நான் வேங்கடத்தைத்தான் கேட்டேனே ஒழிய, வேங்கடத்துக் கடவுள் சாத்தியிருப்பதைக் கேட்கவில்லையே! ஐயகோ! பிறந்த இடத்தில் வாழமுடியாதவர்கள், தெருவில் திரிந்தென்ன? நடுவில் மாய்ந்தென்ன?"

இனி தத்துவம்; "காவலரும் செல்வரும்" என்ற படத்திற்கு எழுதியது:

"வாழ்வாவது மாயம்; இனி அது மண்ணாவது உண்மை! தமிழரசுக் கழகமாவது மாயை! தகர டப்பாவே அதன் சாயை!"

x x x

இத்தனையும் சில துளிகள் தாம். நகைச்சுவையைக் காணோமே என்பீர்கள்! இவையே போதும், அவருக்கு நகைச்சுவையும் வரும் என்பதைக் காட்ட! இப்போது சொல்லுங்கள், "சிவஞானத்தார் சினிமாவுக்கு எழுத மறுத்தது, சரியா? தவறா?" என. "தலையறுத்தல் மன்னர்கட்குப் பொழுது போக்கு; ஏழைகளுக்குப் படுவதை!" என்பதாக ஒரு பேச்சு. அதை ஒட்டிச் சொல்கிறேன், "சினிமாக்கு வசனம் எழுத மறுத்தல் சிவஞானத்திற்கு ஒரு பொழுது போக்கு; ஆசுப்ரோ கடைக்காரருக்குப் பெருங் கவலை!" என.

—செழியன்

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டியவன்தான். கட்சியில் களையெடுப்பு என்பது எந்த ஓர் அரசியல் கட்சியிலும் திகைப்பூட்டக்கூடிய நிகழ்ச்சி அல்ல. களையே பயிராக வளர்ந்துவிட்ட காங்கிரசுக் கட்சியைத் தவிர, பிற எல்லா இயக்கங்களும் இம்முறையினை மேற்கொண்டிருக்கின்றன. அந்தக் காங்கிரசில்கூட சுதந்திரத்திற்குப் பிறகு பண்டிதநேருவே ஒருமுறை இராஜிநாமா செய்து 'அதிர்ச்சி வைத்தியம்' கொடுத்திருக்கிறார். திட்டவட்டமாகப் பொதுவுடைமைக் கட்சி ஆண்டுதோறும் களையெடுத்து வருகிறது. யாரை வேண்டுமானாலும் அக்கட்சி உறுப்பினராகச் சேர்ப்பதில்லை. அங்கே பல சோதனைகளுக்குப் பிறகே ஒருவன் சாதாரண உறுப்பினனுக்கப்படுகிறான். அதிலிருந்து அவனைத் தட்டித் தட்டிப் பார்த்துத்தான் மத்தியக் கமிட்டிக்குக் கொண்டுவருகிறார்கள். அதனால் இரும்புக்கவசம் அணிந்த போர்வீரர்களைப்போல் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் இரகசியம் காப்பாற்றுகிறார்கள். அந்தக் கவசத்தையும் கிழித்துக் கொண்டு எப்போதோ ஒருமுறை இரகசியம் வெளியில் வந்துவிடுகிறது.

நாம் முழுக்க முழுக்க ஜனநாயகவாதிகள் தாம். இதில் மாறுபாடோ, முரண்பாடோ இயக்கத்தின் எந்த அங்கத்திலும் தோன்றவில்லை. அமைதியான ஓட்டு முறையில்தான் நாம் முழு நம்பிக்கை வைத்திருக்கிறோம். இதை மாற்றப்போவதுமில்லை; மாற்றவேண்டியதுமில்லை. புரட்சி என்கிற வார்த்தை நம்மைப் பொறுத்தவரை கருத்துப் புரட்சியையே குறிக்கிறது. இருப்பினும் ஜனநாயகத்திற்கு உள்ளடங்கிய இரகசியங்கள் பிற கட்சிகளுக்கு இருப்பதுபோலவே நமக்கும் இருக்க வேண்டும். அந்த ஆபத்தில்லாத இரகசியங்களையாவது நாம் காப்பாற்றியாக வேண்டும். அதைக்கூடக் காப்பாற்றச் சக்தியற்றவர்கள் சிறிதும் கருணையின்றிக் கட்சியிலிருந்து தூக்கி எறியப்படவேண்டும். இந்தக் களையெடுப்பு மிகவும் அவசரமானது.

வரைமுறையின்றி யாரும் உறுப்பினராகச் சேருவதால்தான், ஓர் உறுப்பினர் சீட்டைக் கையில் வைத்துக் கொண்டு, 'நான் தி. மு. கழகத்தில் இருந்தேன்; இப்போது விலகிவிட்டேன்' என்று எவனெவனோ பேசத் தலைப்படுகிறான். இதை நாம் கவனித்தாக வேண்டும்.

நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். மிகவும் எச்சரிக்கையுடனே நான் இதனை எழுதுகிறேன். ஒரு குழுவில் சொல்லவேண்டியதை உங்களுக்குக் கடிதமாக வரைகிறேன். என்னை உங்களுக்குத் தெரியும். எந்த உள் நோக்கமும் இல்லாத ஒருவன் என்கின்ற முறையில் என்னை நீங்கள் நம்பலாம். எதிர்தரப்பில் எவன் எதைப் பேசினாலும் நான் கவலைப்படமாட்டேன். இப்போது நான் மட்டுமே எதிரிகளின் கண்ணுக்குத் தெரிகிறேன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். எதிரிகளால் நான் எவ்வளவு கேவலமாகத் தாக்கப்படுகிறேன் என்பது உங்களுக்குத் தெரிந்ததே. எனினும் இவ்வழியில் என் இதயத்தில் சஞ்சலம் உண்டாக்கும் முயற்சியில் அவர்கள் இன்றுவரை தோற்றிருக்கிறார்கள். பழியுரை கேட்டு ஒரு முறையேனும் நான் முகஞ் சுளித்தவனல்லன். போலிகளின் பொய்யுரைகள்-புகழ், தொழில் இரண்டிலும் என் சூழ்நிலையை அணுவளவும் மாற்றிவிட முடியவில்லை. நான் ஏற வேண்டும் என்று ஆசைப்படும் ஏணியில் ஏறிக்கொண்டிருக்கிறேன். நிற்க வேண்டுமென்று விரும்புகிற இடத்தில் நானே நின்றுகொள்கிறேன். ஆகவே, என் ஆசாபாசங்களுக்காக எந்த யோசனையையும் இயக்கத்திற்கு நான் கூறமாட்டேன். என்னை வளர்த்தது இயக்கந்தான் என்பதைக் கனவிலும் நனவிலும் நான் மறவாதிருப்பதால், இயக்கத்தில் செம்மைப்பாட்டை நான் வேண்டி நிற்கிறேன்.

தனிப்பட்ட யாரிடத்தும் ஒரு துளியும் நான் தவறு கண்டுபிடிக்கவில்லை. முழுக்க முழுக்க இயக்கத்தின் எதிர்காலத்தைப்பற்றிய பொறுப்புடனேயே இதனை எழுதுகிறேன். கட்சியிலிருக்கும் ஒவ்வொரு தோழரும் இதைக் கவனித்து ஒதுக்க வேண்டியவர்களை ஒதுக்கி, சேர்க்க வேண்டியவர்களைச் சேர்த்துச் செயல்பட வேண்டுமென நான் ஆசைப்படுகிறேன். எதிரிகள் சிலர்; நாம் பலர். எதிரிகளைக் கவனிப்பதற்கு இருபது நிமிடங்கள் தேவை என்றால், நம்மை நாமே கவனித்துக் கொள்வதற்கு ஒரு முழு நாளே தேவைப்படுகிறது.

மற்றப்படி ஏதோ ஒரு நாளிதழ் எழுதியிருந்ததுபோல், தனித் தலைமையையோ தனி இயக்கத்தையோ நான் சிந்தித்தவன்கூட அல்ல. அதைப் படித்தபோது எனக்கே சிரிப்பு வந்தது. பொறுப்போடு ஓர் இயக்கத்தை நடத்தக்கூடிய முழு வல்லமை நிச்சயமாக எனக்கு இல்லை. என்னை நீங்கள் நன்றாக அறிவீர்கள். உள்ளது உள்ளபடி சொல்வேன். முடிந்தால் செய்வேன்; முடியவில்லையேல் போய்க் கொண்டேயிருப்பேன். ஆனால் எப்போதுமே அரசியல் தத்துவங்களில் முரண்படமாட்டேன். கட்சியின் உள் பீடங்களிலோ வெளி அரசியலிலோ எந்தப் பதவியையும் உதவியையும் நான் யாசித்தவனுமல்ல; நேசித்தவனுமல்ல. நீங்கள் ஆணையிட்டால் கட்சியின் சாதாரண உறுப்பினன் என்கின்ற நிலைமையிலிருந்துகூட விலகி, கட்சித் தொண்டு செய்துகொண்டிருப்பேன். மாணவ நண்பர்கள் சிலர் இதனை என்னிடம் வலியுறுத்தினார்கள். நிறையைப் படித்து, நிறைய எழுதிப் பெயர் பெறும் ஆசை எனக்கு அதிகம். ஆனால் சூழ்நிலை கருதி ஆவேசமான அரசியலில் நான் ஈடுபட விழைந்தேன். நியாயமான காரணங்களுக்காகத் தலைமை நிலையம் என் கைகளைக் கட்டி வைத்திருக்கிறது.

என்னை எந்த வழியில் செல்ல வேண்டும் என்று இயக்கம் பணிக்கிறதோ, அந்த வழியில் செல்வேன். நானும் தீவிரமாகவே யோசித்துகொண்டிருக்கிறேன். கழகத்தின் எதிர்காலத்துக்குக் கவிதை யாத்துக்கொண்டிருப்பதை மட்டுமே செய்துகொண்டு இருந்துவிடலாமா? முழுக்க முழுக்க அரசியல் மேடைகளிலேயே இயங்கி வரலாமா?- இந்தக் கேள்விகளுக்கு நான் விரைவில் விடை கண்டு பிடிப்பேன்.

அன்புள்ள,

கண்ணதாசன்

பத்திரிகை உலகிலே புதிய முயற்சி!



கண்ணையும் மனதையும் கவரும்!
கலையுலகச் சேதிகளும் காட்சிகளும் காட்டும்!
முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எங்கும் தேவை.
விலை 13 காசு.
விவரங்கட்கு:
"திரை நிலா", 28, வாணியர் தெரு, சைதை, சென்னை-15.

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

இருந்ததால், அவன் அவளோடு வரமுடியவில்லை. "இரண்டு மாத காலத்தை எண்ணிக்கொண்டிரு; எண்ணி முடிப்பதற்குள் பறந்துவந்து விடுவேன்," என்று கூறிப் பிரியா விடை கொடுத்தனுப்பினான். "என் உயிர் உடலில் தரியாதிருந்தால், தாங்கள் பாக்கியசாலி," என்று கூறி விடை பெற்றுக்கொண்டாள் மலர்விழி. மார்கரெட் கண்ணீர் மல்க அவளைவிமானத்தில் ஏற்றி அனுப்பி வைத்தாள் மலர்விழியின் கண்ணீர் அளவிட முடியாதது பெற்ற தாயை விடப் பெரும் அன்பு காட்டிப் பேணி வளர்த்து, இழந்ததைத் திருப்பிக் கொடுத்த தாய் மார்கரெட்டைப் பிரிய யாருக்குத்தான் மனம் வரும்?

—நா. ஜகந்நாதன் எம். ஏ.

(அடுத்த இதழில் முடியும்)

ஆசிரியர்: கண்ணதாசன் அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன். ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6 தமிழ்நாடு